Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




ராம்கோ RAMCO

RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து

(C/1049)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 06 செவ்வாய்கிழமை (22.11.2011) பக்கங்கள் 16 ஓசை – 52




பயமில்லை

08



குறைந்து செல்லும் பொது அறிவு

05



சரிப்பட்டு வராது

12



14

மூடப்படுமா பாடசாலை



# அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

- உல்லாசப் பயணிகளுக்கு விசா கட்டணம் நீக்கம்
- அரச ஊழியருக்கு 10 வீத சம்பள அதிகரிப்பு
- ஊடகவியலாளர்களுக்கு கடன் வசதி
- சிரேஷ்ட பிரஜைகளுக்கு ஆயிரம் ரூபா
- சமுர்த்திக் கொடுப்பனவு அதிகரிப்பு
- உயர்கிறது ஓய்வூதியம்
- பாதுகாப்புக்கு 230 பில்லியன்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியருக்கான சம்பளம் பத்து சதவீதத்தால் அதிகரித்து வழங்கப்படவுள்ளது. இந்தச் சம்பள அதிகரிப்பில் பாதுகாப்புத்துறையிலுள்ள பதவிநிலை அதிகாரிகளுக்கு ஜனவரி மாதம் முதல் ஐந்து சதவீத அதிகரிப்பும் பதவிநிலை அல்லாதவர்களுக்கு ஜனவரி மாதம் முதல் பத்துவீத அதிகரிப்பும் வழங்கப்படவுள்ளதுடன், பதவி நிலை அதிகாரிகளுக்கான மிகுதி ஐந்துவீத சம்பள அதிகரிப்பு யூலை மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், ஓய்வூதியம் பெறுவோர் 500 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபா வரை அதிகரித்த ஓய்வூதியத்தைப் பெறவுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் சமர்ப்பித்தார்.

இதன்படி அடுத்த வருடத்திற்கான தேசிய வருமானம் 1126.1 பில்லியன், செல வீனங்கள் 1594.9 பில்லியன், துண்டுவிடும் தொகை 468.9 பில்லியன் என ஜனாதிபதி அறிவித்தார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு :

அரசாங்க ஊழியர்களின் சம்பளம் பத்து வீதத்தால் அதிகரிக்கப்படும். இதன்படி -

- பாதுகாப்புத் துறையில் பதவிநிலை அதிகாரிகளுக்கு ஜனவரி மாதம் முதல் ஐந்து வீத அதிகரிப்பும், பதவிநிலை அல்லாத வகுப்பினருக்கு ஜனவரி மாதம் முதல் 10 வீத அதிகரிப்பும் வழங்கப்படும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

**பட்ஜட் ஒரே பார்வையில்...**

மொத்த வருமானம் : 1126.1 பில்.

மொத்தச் செலவு : 1594.9 பில்.

துண்டுவிழும் தொகை : 468.9


# நாடாளுமன்றில் களேபரம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிக் கொண்டிருந்தவேளை, அரச தரப்பு எம்.பி.க்களுக்கும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. எம்.பி.க்களுக்குமிடையே மோதல் நிலை ஏற்பட்டு அடிதடியில் முடிவடைந்ததினால் நாடாளுமன்றில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருந்தவேளை, ஐ.தே.க. எம்.பி.க்கள் சிலர் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு எதிராகக் கோஷமெழுப்பியதுடன், சபையில் எழுந்து நின்று "வெட்கம்" என மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட

(15 ஆம் பக்கம் பார்க்க)



## ஆளுங்கட்சி எம்.பி.க்களால் தாக்குதலுக்கு இலக்கானோம்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தன்னையும் தனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஆளும் கட்சியினர் நாடாளுமன்றத்தில் வைத்து தாக்கியதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பாக வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமை தொடர்பில் தாம் எதிர்ப்பை வெளியிட்டபோது ஆளும் கட்சியினருக்கும்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# பள்ளி மாணவன் பரிதாப மரணம்

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலய நுழைவாயிலின் கதவு தூணுடன் முறிந்து விழுந்ததில் பாடசாலை மாணவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பாடசாலையில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மாணவர்கள் பாடசாலை வாயில் கதவில் தொங்கி விளையாடிக் கொண்டிருந்த சமயம் திடீரெனக் கதவுடன் தூண் இடிந்து விழுந்ததில் மாணவன் ஒருவர் அதில் நசுங்கி ஸ்தலத்தில் பலியாகியுள்ளான்.

இம்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் செந்தூரன் (வயது-06) என்ற மாணவனே பலியானவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும் பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (உ-11,பா)

# யாழ்ப்பாணத்தின் இன்றைய யதார்த்தம் அமெரிக்கப் படை அதிகாரிகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்துக்குப் பிந்திய வடக்கின் இன்றைய நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பதை அறிந்து கொள்ள அமெரிக்காவின் இராணுவ உயர் அதிகாரிகள் குழு ஒன்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் வந்த இவ் இராணுவ உயர் அதிகாரிகள் குழுவினர் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து கள நிலவரங்களை நேரடியாக அவதானித்தனர்.

ஐந்து இராணுவ உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய இக் குழுவினர் இலங்கை இராணுவத்தின் பலாலி படைத் தளத்தின் ஏற்பாட்டிலேயே யாழ். வந்திருந்ததாக மேலும் தெரியவருகின்றது.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம் செய்த இக்குழுவினர் நூலகத்தின் பகுதிகளையும் பார்வையிட்டுள்ளனர்.

ஏற்கனவே கடந்த மாதம் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினரும் அதற்கு முன்பாக அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் போன்றோர் யாழ்.குடாநாட்டிற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# வெள்ளப் பாதிப்பு துயர்துடைக்க வேலணையில் விசேட குழு அமைப்பு

(வேலணை)

அடைமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக் களை மதிப்பீடு செய்யவும் பொதுமக்களின் துயர்துடைப் பதற்காகவும் வேலணை பிரதேச சபை விசேட குழு ஒன்றை அமைத்துள்ளது.

வேலணை பிரதேச சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற் றுக் காலை 10.00 மணியளவில் சபைத் தவிசாளர் சி.சிவராசா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மழை காரண மாக நீர் தேங்கும் இடங் களைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப் பிப்பதற்காக பின்வரும் அங்கத் தவர்களைக் கொண்ட குழு நிய மிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு -

சி.சிவராசா - தவிசாளர், உறுப்பினர்களான பா.தவபாலன், கு.சிவகுலசிங்கம், மு.சிவராசா, சோ.கோபிலக்ஷன், க.கனக ரெத்தினம்.

வெள்ளம் ஏற்படும் வேளைக ளில் இவர்களுக்கூடாகவே நிவா ரணப்பணி மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க மழை காலத்தில் ஏற்படும் அனர்த்தங் கள் மற்றும் அழிவுகள் சம்பந்த மாக மக்களுக்கு ஏற்படும் சிர மங்களைத் தீர்த்து வைப்பதற்கு இக்குழு சபையின் தீர்மானத்து டன் அமைககப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (85)

## தீவகத்தில் 'வாழ்வு எழுச்சி' திட்டம் கைப்பணிப் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

(வேலணை)

குடிசைக் கைத்தொழில்துறை சார்ந்த வகையில் வாழ்வு எழுச் சித் திட்டத்தின் பிரகாரம் பனை சார்ந்த கைப்பணிப் பொருட்க ளின் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித் தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் வேலணை பிரதேச செயலர் காரியாலய பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நேர்முகத் தேர்வில் வேலணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பகுதியிலிருந்து பெண்களும் ஆண்களுமாக 33 பேர் விண்ணப்பித்துள்ளனர் என் றும், இவ்வாறு விண்ணப்பித்த வர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்த கைத்தொழில் கண்காட்சி ஒன்றில் விண்ணப் பித்திருந்ததாகவும், அதன் அடிப் படையிலேயே நேர்முகத் தெரிவு கள் இடம்பெறவுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. (05)

## கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கம் இன்று நிர்வாக சபைத் தெரிவு

(சாவகச்சேரி)

மீளக்குடியமர அனுமதிக்கப் பட்ட கிளாலிப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்க புதிய நிர் வாக சபைத் தெரிவு இன்று நடைபெறவுள்ளது.

கடந்த 15 வருடங்களின் பின் மக்கள் மீள்குடியேற அனுமதிக் கப்பட்ட நிலையில் கிராம அபி விருத்தி வேலைகளை முன்னெ டுத்து மக்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்துவதற்காக புதிய சங்க நிர்வாகம் தெரிவு செய்யப்படுவதாகவும், இதற்கு மக்கள் ஒன்றுகூடி சிறந்த நிர் வாகத்தை தெரிவுசெய்ய ஒத்து ழைப்பு வழங்குமாறு சங்க முன் னாள் செயலாளர் அறிவித்துள் ளார். (உ-11)

## வீதியோர வியாபாரம் பொதுமக்கள் விசனம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதிப்பகுதியில் அமைந்துள்ள நெருப்பு மூட்டி கள்ளுத்தவ றணைப் பகுதியில் பிற்பகல் வேளையில் மீன் வியாபாரிகள் வியாபாரம் செய்வது தடைசெய் யப்பட்டுள்ளது.

இதனால் பிற்பகலில் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியா பாரிகள் அவ்விடத்தை விட்டு ஆவரங்கால் சந்திப் பகுதிக்கு அண்மையான பகுதியில் வீதி யோரப் பகுதியில் மீன் வியா பாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு வீதியோரத்தில் வியாபார நடவடிக்கையில் வியா பாரிகள் ஈடுபட்டு வருவதனால் சில சமயங்களில் அப்பகுதியில் போக்குவரத்துச் செய்வதில் வாகனச் சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், விபத் துக்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை காணப்படுவதையும் காணக்கூடி யதாக உள்ளது. (03)


### பிரதேச செயலகம் - தீவுப்பகுதி தெற்கு, வேலணை

**அறிவித்தல்**

**பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில், வேலணை வருடாந்தப் பொதுக்கூட்டம்**

மேற்படி கோயிலின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 10.12.2011 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு மேற்படி ஆலயத்தில் நடைபெறும். எனவே தொடர்புடைய அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மு.நந்தகோபாலன்**
**பிரதேச செயலாளர்,**
**தீவுகள் தெற்கு, வேலணை.** (C/1093) **21.11.2011**


## கருத்தரங்கு

(ஆனைக்கோட்டை)

சொண்ட் நிறுவனத்தின் அனு சரணையுடன் பெண்களுக்கெதி ரான வன்முறையை எவ்வாறு ஒழிக்கலாம் என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று காலை 10.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் அ.யோ.எழி லரசி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் குடும்பநல உத்தி யோகத்தர் மகளிர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (உ-104)


## திருநகரில் இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையால் நடத் தப்படும் ஜே/67 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்களின் பங்கேற்புடன் நடத்தப்படும் கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு திருநகரில் உள்ள மாணவர் படிப்பகத்தில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவி ருத்திக்கான ஒத்துழைப்பினை யும் ஆலோசனைகளையும் வழங் குமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராஜா அறிவித்துள்ளார்.(எப்.எஸ்)

## 'தேசத்திற்கு நிழல்' வேலைத் திட்டம் அமுல்



(அச்சுவேலி)

கல்வி அமைச்சின் பணிப்பு ரைக்கமைய வலயக் கல்விப் பணிப்பாளர்களின் வேண்டுகோ ளுக்கிணங்க தேசத்திற்கு நிழல் தேசிய மரநடுகை வேலைத் திட்டம் எனும் தொனிப்பொருளில் கடந்த 15ஆம் திகதி பாடசாலை களில் மரம் நடுகை வேலைத் திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் ஒவ்வொரு பாடசா லையிலும் குறைந்தது 25 பயன் மிக்க மரக்கன்றுகளை நாட்டி அவற்றை தொடர்ந்து பேணிப் பராமரித்து பாதுகாப்பதுடன், அது தொடர்பான அறிக்கை யினையும் சமர்ப்பிக்குமாறு அதி பர்களுக்கு வேண்டுகோள் வழங் கப்பட்டுள்ளது.

இம்மரம் நடுகைத் திட்டத் திற்கு கோட்டக் கல்வி அலுவல கம் மற்றும் மரக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் மூலமாகவும் மலைவேம்பு, தேக்கு, வேம்பு, மா போன்ற பயன்மிக்க மரக் கன்றுகள் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (03)


### சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற் றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங் கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)


## நீதிமன்றச் செய்திகள்

### அபராதம் விதிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - கெருடாவில் பகுதியில் மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி மற்றும் வரி அனுமதிப் பத்திரங்கள் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தினால் 9500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரைச் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் ஆஜர்படுத்தினர். (உ-11)

✧ ✧ ✧ ✧ ✧

சாவகச்சேரி நகரப் பகுதியில் மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற மந்துவில் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 7500 ரூபா அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்து நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். (உ-11)

✧ ✧ ✧ ✧ ✧

யாழ். பொலிஸாரினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை யில் யாழ். நகரப் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம், தலைக்கவசம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய பலர் பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டனர். இவர்களுக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் 7000 ரூபா அபராதம் விதித்தது. (எஸ்)

---

வீதியால் சென்றுகொண்டிருந்த இளைஞன் மீது வழிமறித்து தாக்குதல் நடத்திய 4 சந்தேகநபர்களையும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் அனுமதிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிக்கு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

ஆசீர்வாதப்பர் வீதியால் நேற்றுமுன்தினம் சென்றுகொண்டிருந்த இளைஞனை இச்சந்தேகநபர்கள் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் குறித்து பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபர்கள் நால்வரையும் கைதுசெய்து நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.(எஸ்)

## தவற விடப்பட்டுள்ள அடையாள அட்டைகள்

(கிளிநொச்சி)

திருமுறிகண்டி கோயிலை அண்மித்த பகுதிகளில் தவற விடப்பட்ட அடையாள அட்டை கள் கண்டெடுக்கப்பட்டு திருமுறி கண்டி கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது, யாழ். பிரதான வீதியிலுள்ள தின முரசு காரியாலயத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள் ளவும்.

தேசிய அடையாள அட்டை கள் -

பூமிபாலு பாலகபூர் - 731793 476V, செல்வாபுரம், திருமுறி கண்டி

முருகன் ஜீவந்தன் - 901164 100V, மட்டுவில் தெற்கு, சாவகச் சேரி

கணேசலிங்கம் தனுஷன் 900562756V, விடத்தற்பளை, மிருசுவில்

இராசலிங்கம் திரவியம் 6560 02654V, பாரதி வீதி, கோண்டா வில்.

ரி.ரேவதி - சுழிபுரம் (தொழில் அடையாள அட்டை), தர்மகுண சீலன் குலசிங்கம் - பல்லவராயன் கட்டு கிளிநொச்சி (தற்காலிக அடையாள அட்டை), எஸ்.தம்பி ராசா 4 ஆம் யுனிற், புதுக்குடியி ருப்பு (தற்காலிக அடையாள அட்டை). (77)


### யாழ்ப்பாணம் மாநகரசபை

**வீதிக்குப் பெயர் சூட்டுதல்**

மக்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் வீதிகளுக்கு பெயர் சூட்டப்படவுள்ளமையால் இதற்கு பொதுமக்களின் கருத்தினை எதிர்பார்க்கின்றோம். மக்களின் கருத்துக்களை/ அபிப்பிராயங்களை எதிர்வரும் 2011.12.15 ஆம் திகதிக்கு முன்னர் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள் கின்றேன்.

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| 1. திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியிலிருந்து கலட்டி ஊடாக நாச்சிமார் கோயில் வரை பான வீதி தற்போதைய இராமநாதன் வீதி | சேர். பொன். இராம நாதர் வீதி |
| 2. சின்னாலங்கண்டு வீதி அல்லது அத்திக் காட்டு வீதி | கலைவாணி வீதி |
| 3. பாழ்ப்பாணம் சுண்டுக்குளி பிரதான வீதி பிலிருந்து தெற்குப் பக்கமாக சென். சாள்ஸ் பாடசாலைக்குச் செல்லும் வீதி | ஆயர் இல்ல வீதி |
| 4. மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள 7 ஆம் ஒழுங்கை | அல்வின் ஒழுங்கை |

**திருமதி. யோ.பற்குணராசா**
**முதல்வர், மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.** (C/1092)

வாழ்க்கையில் நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்களோ அதை விரைவாகவும், நேரடியாகவும், சுலபமாகவும் பெற்றுத் தரக்கூடிய இரண்டெழுத்து மந்திரம் : 'கேள்'

- எம்.ஆர்.காப்மேயர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## மற்றவர்க்காய் நாம் செய்வது

நேற்று பிற்பகல் 2 மணியளவில் பாராளுமன்றத்தில், ஜனாதிபதி வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்த ஆரம்பித்தபோது, எதிர்க்கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்து கூச்சலிட்டுள்ளனர். அவர்கள் ஏந்திப் பிடித்த, 'வெட்கம் வெட்கம்' என்று எழுதப்பட்ட பதாகைகளை பறிக்க ஆளும் கட்சி உறுப்பினர்கள் முயல, மோதல் நிகழ்ந்திருக்கின்றது.

இரு தரப்பு பின்வரிசை உறுப்பினர்களும் தண்ணீர் போத்தல்களை பறக்கவிட்டிருக்கிறார்கள். ஜனாதிபதியை நோக்கியும் போத்தல் பறந்திருக்கிறது. பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்ய, ஐ.தே.க.வின்ர் வெளியேறும் நடவடிக்கையிலேனும் ஒற்றுமையாகச் செயற்படுவதைக் காண மகிழ்ச்சியாக இருப்பதாக ஜனாதிபதி வேறு கிண்டலடிக்க, ஒருவாறு பாராளுமன்றம் தனது மோதல் பாரம்பரியத்தைக் கைவிடாமல் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் இந்த மோதல் காட்சிகளை பிரசுரித்த இணையத்தளம் ஒன்று, படத்தின் கீழே 'நமது எம்.பிக்கள் செயற்படுவதில்லை என்று யார் சொன்னது?' என்று கேட்டு நையாண்டி மேளம் வாசித்திருக்கிறது. வழமையாக நிதியமைச்சர்களின் இத்தகைய நீண்ட உரைகளின்போது, நமது கௌரவ எம்.பிக்கள் அனைவரும் ஆழ்ந்த சயனத்தில் இருக்கும் படங்களைப் பார்த்திருக்கும் நமக்கு இது கொஞ்சம் விறு விறுப்பான காட்சிதான்.

ஆனால் இந்தப் பாரம்பரியம் நமக்கொன்றும் புதுசல்ல. பிரிக்க முடியாதது எதுவோ? என்ற கேள்விக்கு, 'பாராளுமன்றமும் அடிதடியும்' என்று பதில் சொல்லக்கூடிய அளவுக்கு நிறையவே இந்தச் சண்டைகளைப் பார்த்து வருகின்றோம். நம்மிடமிருந்து தெரிவாகிச் சென்றிருக்கும் நமது பிரதிநிதிகள் எப்படி வன்முறையுணர்வில்லாமல இருந்துவிட முடியும்?

நாகரிகம் கற்றுத் தருவதற்காகவும் தான், பல்வேறு நாடுகளைப் பிடித்து ஆண்ட கதையைச் சொல்லிக்கொண்டிருக்கும் பிரித்தானியப் பேரரசின் பாராளுமன்றத்திலும் கூட அடிதடிகள் அலங்கோலங்கள் அரங்கேறியதைப் பார்த்திருக்கிறோம். பக்கத்தில் தமிழ்நாடு சட்டசபை பல்வேறு சுவாரஷ்யமான காட்சிகளைக் காலத்துக்குக் காலம் நமக்கு காண்பித்து வந்திருக்கிறது.

ஒலி வாங்கியைப் பிடுங்கி அடித்தல், நாற்காலிகளைத் தூக்கி வீசுதல், பேப்பர்களை கிழித்துப் பறக்கவிடுதல், ஓங்கிப் பளாரென முதுகில் அறைதல், வேட்டியை சேலையை உருவுதல் என மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அத்தனை கொண்டாட்டங்களும் அங்கே நடப்பதை அறிவோம். பெரிய பெரிய சபைகளில் தான் என்றில்லை; உள்ளூராட்சி சபைகளிலிருந்தே இந்த மோதல் நாகரிகம் ஆரம்பித்துவிடுவது நமக்குத் தெரியும்.

இவற்றைப் பார்க்கும்போதும், அறியும்போதும் நமக்கு அசூயையும் கூச்சமும் உண்டாவது, நமக்குள்ளிலிருக்கும் அசிங்கமான பகுதி இப்படிப் பட்டவர்த்தனமாகத் தெரியவந்து விடுவதால்தான். நம் எல்லோரது வன்முறை அநாகரிக உணர்வுகளும் தான் அந்தப் பேரரங்கத்தில் காட்சிப்படுத்தப்படுகிறது.

நமது பத்திரிகைகளும், ஊடகங்களும் அதை அரசியல்வாதிகளின் இழிவாக அருவருப்பைக் கொட்டி எழுதித் தப்பிவிட முடியாது. நம்மெல்லோரது அரசியலும் நாகரிகமும்தான் அங்கே நடிக்கப்படுகின்றது என்பதை மறுத்து நாசூக்காக முகத்தை நொடித்துத் திருப்பிக்கொள்வதில் அர்த்தமில்லை. அது ஒரு வகை மேட்டிமைத் தப்பித்தலாகத்தான் இருக்கும்.

நம் எல்லோரது செயல்களை, இருப்பை, வாழ்வைத் தீர்மானிப்பதாக அரசியல் இருக்கிறது. அதை அசிங்கம் என்றோ சாக்கடை என்றோ சொல்லி, அதற்கு வெளியே புனிதமான இடத்தில் எம்மை வைத்துவிட முடியாது. நாமும் அதற்குள்தான் இருக்கின்றோம்.

எனவே நம்மைச் சரிசெய்வதும், நம்மிடமிருக்கும் வன்முறையை அவதானித்து விலக்க முயல்வதும்தான் நம் தலைவர்களை சரிசெய்து விடுதாகவும் இருக்கும். அதன் பிறகுதான் நம்முடைய நல்லியல்புகள் பாராளுமன்றத்திலும் பிரதிபலிப்பதை எதிர்பார்க்க முடியும்.

- ஆசிரியர்

# அரசாங்கத்துக்கு எதிரான வழக்குகளுக்கே முன்னுரிமை

## குற்றஞ்சாட்டுகின்றார் ஜே.வி.பி.யின் சட்டத்தரணி

(கொழும்பு)

பல்வேறு கொலைச் சம்பவங்கள் தொடர்பில் குற்றவாளிகளுக்கு எதிரான வலுவான சாட்சியங்கள் இருந்தும் கூட அவ்வாறான வழக்கு விசாரணைகள் தாமதப்படுத்தப்படும் நிலையில், அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் தொடர்பான வழக்குகளில் அரசாங்கம் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அஜித் குமார தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தொடர்பான வழக்கில் மூன்று வருட காலச் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் ஒரு வருட காலம் விசாரிக்கப்பட்டு வந்த வெள்ளைக் கொடி வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

வழக்கு விசாரணை நடைபெற்ற காலத்தில் சரத் பொன்சேகாவுககு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க முடியாது என பொதுவாக சமூகத்தில் கருத்து நிலவியது. எனினும் இறுதியில் அவருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பல்வேறு கொலைச் சம்பவங்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் அவர்களுக்கு எதிரான வலுவான சாட்சியங்கள் இருந்தும் கூட அவ்வாறான நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் தொடர்பான வழக்குகள் குறித்து அரசாங்கம் கடும் கவனத்தை செலுத்தி துரிதமாக செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலைமையில் சரத் பொன்சேகாவுக்கு ஏற்பட்டுள்ள தலைவிதியானது முழு சமூகமும் பாதுகாப்பற்ற நிலைமையில் இருப்பதையே எடுத்துக் காட்டியுள்ளது என்றார்.

# ஜே.வி.பி.கிளர்ச்சிக் குழு மூலம் மேற்குலகம் அரசைக் கவிழ்க்க முயற்சி

## கூறுகிறார் சிரேஷ்ட அமைச்சர்

(கொழும்பு)

ஜே.வி.பியிலிருந்து பிளவடைந்துள்ள கிளர்ச்சிக்குழுவினைப் பயன்படுத்தி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு மேற்குலக நாடுகள் முயற்சி செய்து வருவதாக சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார். புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மேற்குலக நாடுகள் அதிருப்தி அடைந்துள்ளன.

புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்படுவதனை மேற்குலக நாடுகள் விரும்பவில்லை. புலிகள் தோற்கடிக்கப்பட்டதனால் மேற்குலக நாடுகளின் ஆயுத விற்பனைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

என்.எம்.பெரேரா ஊடக நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போதைய சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள முடியாத நிலைமையினால் ஜே.வி.பி.யில் சர்ச்சை வெடித்துள்ளது என சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார். நியோ லிபரல் முறைமை பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் அதுவே ஜே.வி.பியையும் தாக்கியுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஜனாதிபதி அறிக்கையை ஆராய்ந்த பின் வெளிநாடுகளுக்கு தெரியப்படுத்தப்படும்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் வெளிநாட்டு தூதரகங்களை தெளிவுபடுத்தவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து பார்த்த பின்னர் அது தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு அறிவிக்கப்படவுள்ளதாக பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மற்றும் முறைப்பாட்டாளர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காகவே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த அறிக்கையிலுள்ள விடயங்கள் நடைமுறைச் சட்டத்திற்கு அமைய செயற்படுத்தப்படவுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதி தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அதன உத்தியோகபூர்வ அறிக்கையை தயாரிக்கும் பணிகளை கடந்த 15 ஆம் திகதி நிறைவு செய்தது.

# எம்பிலிப்பிட்டியவில் இரு கொலைகள்

(கொழும்பு)

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு பகுதிகளில் இருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். எல்பிட்டிய தீகலகனகொட பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலை மையகம் குறிப்பிடுகின்றது

27 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை எல்பிட்டிய இகல்கந்த பிரதேசத்தில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொரு நபர் எல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதை அடுத்து இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை.

# தொழிற்சங்கத்தின் போராட்டம் முடிவு தபால்சேவை வழமைக்குத் திரும்பியது

(கொழும்பு)

தபால் ஊழியர்கள் முன்னெடுத்து வந்த தொழிற்சங்க நடவடிக்கை நேற்று நண்பகல் 12 மணியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக தபால் தொழிற்சங்க ஒன்றியம் அறிவித்துள்ளது. தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் தொழிற்சங்க நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவர தீர்மானித்ததாக தபால ஊழியர்கள் தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

தமது தொழிற்சங்க நடவடிக்கையால் கொழும்பு தபால் பரிமாற்றகத்தில் குவிந்துள்ள 18 இலட்சம் கடிதங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தபால் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ அமைச்சருக்கும் தொழிற்சங்க ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று முற்பகல விசேட கலந்துரையாடல் இடம் பெற்றதாகக் கூறினார். இதன்போது எட்டப்பட்ட தீர்மானத்திற்கு அமைய தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட தபால் தொழிற்சங்க ஒன்றியம் இணக்கம் தெரிவித்ததாக அவர் தெரிவித்தார்.

# சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலையின் புதிய கட்டடம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் புதிய கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இக்கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளரும், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருமான இ. இளங்கோவன் கௌரவவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர் மற்றும் ஏனைய விருந்தினர் மாணவர்களின், பான்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டார்கள். ஆளுநர் தேசியக் கொடியினையும், கல்வி அமைச்சின் செயலாளர் மாகாணக் கொடியினையும் ஏற்றிவைத்தார்கள்.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி அமைச்சினால் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் இக்கட்டடத்தின் அடுத்த கட்டப் பணிகளை மேற்கொள்ள எதிர்வரும் நிதியாண்டில் ரூபா 5 மில்லியன் ஒதுக்குவதாகவும், பழைய கட்டடத்தினை அகற்றுவதற்கு வேண்டிய நிதியுதவியினை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் (பதில்) எஸ். ரவீந்திரன், யாழ். வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# புலமைப் பரிசில் சித்தியடைந்த ஆனந்தா மாணவி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்று தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவியை கௌரவிக்கும் விழா நேற்று முன்தினம் மதியம் 3.00 மணிக்கு பாடசாலை அதிபர் ச. ரூபசிங்கம் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது. புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்ற ரஞ்சினி தனுசியாவிற்கு பரிசில்களும், கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர், ஆசிரியர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் 2011ஆம் ஆண்டில் தரம் 5இல் கல்வி கற்கு வேறு பாடசாலைக்குச் சென்ற மாணவனும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா, டோக கட்டார் நாட்டின் இலங்கைக்கான முன்னாள் பிரதித் தூதுவர் ஐ. தர்மகுலசிங்கம், யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசன் உட்பட பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள். (எஸ்)

# கிராமத்திற்கு ஒரு வீடு மன்னாரில் கையளிப்பு

(மன்னார்)

கிராமத்திற்கு ஒரு வீடு என்ற வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மன்னாரில் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கிராமத்திற்கு ஒரு வீடு என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கட்டப்பட்ட ஐந்து வீடுகள் நேற்று முன்தினம் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

அந்த வகையில் மாவட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முருங்கன் மாளிகைப்பிட்டியில் அமைக்கப்பட்ட வீடு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். எம். முனவ்பர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாருக், சிறப்பு விருந்தினர்களாக வர்த்தகத் துறை அமைச்சரின் இணைப்புச் செயலாளர் அலிக்கான் செரிப், நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டர்.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சில் வெற்றிடமாகவுள்ள "அபிவிருத்தி உதவியாளர் பதவி இற்காகவும், நிதி உதவியாளர் பதவிக்கும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 2011-12-10ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், நீதி அமைச்சு, "மீறயர் நீதி மன்றக் கட்டடத்தொகுதி" கொழும்பு 12 என்னும் முகவரிக்கு, விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிதி உதவியாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு, அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு எனவும் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களையும், மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடலாம்.

# வெள்ள வாய்க்கால்கள் சீரின்மையால் குடியிருப்புக்களில் வெள்ளம் புகும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக பெய்த கன மழையினால் நல்லூர்ப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பெரும்பாலான வீதிகள் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் இதனூடாகப் போக்குவரத்துக்கள் சிரமத்தின் மத்தியில் இடம்பெற்று வருவதாக பொதுமக்களால விசனம் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, பெரிய வீதிகளிலிருந்து பிரிந்து செல்லும் சிறிய வீதிகளும் நீண்ட காலமாக திருத்தப்படாத நிலையில் குண்டும், குழியுமாகக் காணப்படுவதுடன் வெள்ள நீர் தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால் பகுதிகளும் சீரான முறையில் வெள்ள நீர் வழிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் இல்லாது குப்பைகளால் நிரம்பி காணப்படுவதால் இந்த வெள்ள நீர் குடிமனைகளுக்குள் புகுந்து தேங்கி நிற்பதாகவும், இதனால் குடியிருப்பாளர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் சைவப் பாடசாலை வீதி, முத்தட்டுமட வீதி, நவரட்ணராஜா வீதி, விவேகானந்தா வீதி, மஞ்சத்தடி வீதி, அமெரிக்கன் மிஷன் வீதி போன்ற வீதிப் பகுதிகளே இவ்வாறு சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேதமடைந்துள்ள இவ்வீதியால் பயணிப்போர் வீதிகளில் வெள்ளம் மேவி நிற்பதால் பள்ளம் தெரியாது விழுந்து எழும்புவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வீதி ஓரங்களில் உள்ள பழைய மதில்களை உடைக்காது உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் தமது மதில்களை புனரமைக்கும் குடியிருப்பாளர்கள் சிமெந்துக் கலவையை வீதியில் வைத்து செய்வதால் அவ்வீதியால் வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாது சில வாகனங்கள் திரும்பிச் செல்லும் சர்ந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் அவ்வீதிகளும் சேதமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீதி வாய்க்கால்களை துப்புரவு செய்து வெள்ள நீர் சீராக வழிந்தோடுவதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் கவனம் எடுத்து செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இடிந்து விழுந்தது பார்வையாளர் அரங்கு

## காரைநகரில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் இந்துக் கல்லூரியில் நீண்ட காலமாக சேத முற்றிருந்த பார்வையாளர் அரங்கு அண்மையில் பெய்த மழை காரணமாக இடிந்து வீழ்ந்துள்ளது. இச்சம்பவம் இரவுவேளையில் நடைபெற்றதால் மாணவர்களுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகரில் கடந்த வாரம் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாகவும், நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது சேதமடைந்திருந்த இக்கட்டடம் முற்றாக கீழே விழுந்துள்ளது. இதனால் விளையாட்டு மைதானத்தில் சிறிதளவேனும் இருந்த நிழற்குடை தற்போது அதுவுமற்ற நிலையில் அவ்வாறு முழுமையாக கீழே விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# நகைக்கடை உரிமையாளரை தாக்கிவிட்டு கொள்ளை

(கிளிநொச்சி)


கிளிநொச்சியில் தொடரும் கொள்ளைச் சம்பவங்களால் பொது மக்கள் மத்தியில் தொடர்ந்தும் அச்சமான சூழல் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை மாலை 7 மணியளவில் நகைக்கடை உரிமையாளர் ஒருவர் தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு வரும்போது அவரது வீட்டிற்கு முன்னால் மறைந்திருந்த மர்ம நபர்கள் தாக்கிவிட்டு அவரிடம் இருந்த பணம், நகை, மற்றும் திறப்புக்களை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் உள்ள நகைக்கடையொன்றின் உரிமையாளரே தனது கடையை மூடிவிட்டு மலையாளபுரத்தில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த வேளை அவரது வீட்டிற்கு முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்தியிருந்த முகமூடி தரித்த நபர் நகைக்கடை உரிமையாளரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த ரொக்கப்பணம், பாதுகாப்புப் பெட்டகத்தின் திறப்பு, கடையின் திறப்பு என்பவற்றைக் கொள்ளையடித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக நகைக்கடை உரிமையாளரால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அன்றைய தினமே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்றைய தினம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



காரைநகரில் மீளக்குடியமர்ந்த பொதுமக்களுக்கான மீள்குடியேற்ற அமைச்சினால் 10 பேருக்கு வீடமைப்புத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. சுமார் மூன்று இலட்சம் பெறுமதியான இத்திட்டத்தில் ஒரு இலட்சம் ரூபா இலவசமாகவும், மிகுதி இரண்டு இலட்சம் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாகக் கடனாகவும் வழங்கப்படுகின்றது. அவற்றின் முதற்கட்டக் கொடுப்பனவை காசோலையாக காரைநகர் உதவி அரச அதிபரிடம் பெற்றுக்கொள்வதனை காணலாம்.



திக்கம் சந்தி கடற்கரைப் பகுதியில் அண்மையில் இறந்த நிலையில் கரையொதுங்கிய பெரிய மீனைக்காணலாம். (116)

# பொது அறிவுத்தேடலைப் பெற நூலகத்தை பயன்படுத்தவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்

(யாழ்ப்பாணம்)

தற்காலத்தில் பொது அறிவுத் தேடல் என்பது குறைவானதாகவே காணப்படுகிறது. முக்கியமாக போட்டிகள் பரீட்சைகள் அல்லது பாடத்திற்கு தேவை எற்படும் போது தான் நூலகத்தை நாடுகிறார்கள் என யாழ். பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் செல்வி கிருத்திகா தருமராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபை நூலகர் என். எச் சாள்ஸ் எழுதிய சமகால பொது அறிவுத் தொகுப்பான "வலை" பருவ இதழ் அறிமுக நிகழ்வு அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது தலைமை தாங்கி உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,



தற்போதைய காலகட்டத்தில் பொது அறிவு நூல்களின் தேவை அதிகரித்துள்ளது. அந்த வகையில் இவ்வாறான இதழ் வெளிவருவது பாராட்டத்தக்க விடயமாகும்.

ஆழமான தேடல் மூலம்தான் பொது அறிவுத் தாகத்தை தணிக்க முடியும் அந்த வகையில் இக்கால கல்விக்கு தேடல் என்பது மிக அவசியம் இந்த இதழ் அத்தேடலை பூர்த்தி செய்திருக்கிறது. இவ்வாறான பெறுமதியான விடயங்களை தாங்கிய நூல்கள் வெளியிடுவது என்பது இலகுவாக காரியமல்ல இதற்கு முக்கியமாக ஆர்வம் தேவையானது.

இதற்கு வாசகர்களும் முக்கிய பங்காற்ற வேண்டும் இவ் இதழ் இத்துடன் நின்றுவிடாது தொடர்ச்சியாக வெளிவரவேண்டும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ். பொது நூலக ஓய்வு பெற்ற நூலகர் எஸ். தனபாலசிங்கம் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் த.தவசேகர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (எப்.எஸ்)

# மன்னார் வைத்தியசாலைக்கு புதிய நிர்வாக அலுவலர்

(மன்னார்)

வடமாகாண சுகாதார அமைச்சினால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நிர்வாக அலுவலகராக எஸ். என்.ஏ.எம். அப்துள் சஜானி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு மன்னார் முருங்கள் பகுதிகளிலுள்ள மாவட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இலிகிதராக பணியாற்றி வந்தார் இந்த நிலையிலேயே இவருக்கு அண்மையில் வடமாகாண சுகாதார அமைச்சினால் மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையின் நிர்வாக அலுவலகராக பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது.

# சேறும் சகதியுமாக காணப்படும் திருநெல்வேலி சந்தை வளாகம்

(யாழ்ப்பாணம்)

மாரி மழையினால் திருநெல்வேலி சந்தையின் வியாபார நடவடிக்கைகள் சுகாதார சீர்கேடான முறையில் இடம்பெறுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சந்தைப்பகுதியின் பிரதான வாயில் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதுடன் சேறும் சகதியுமாக காணப்படும் இடத்தில் வியாபாரிகள் அதன் மேல் மேடைபோட்டு மரக்கறிகளை விற்பனை செய்வதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சந்தையின் பிரதான வீதியால் வழிந்தோடும் வெள்ள நீர்சந்தைக்குள் வருவதாகவும் இதனால் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியில் மரக்கறிகளை கொள்வனவு செய்யவேண்டிய நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இப்பகுதியில் மரக்கறிக் கழிவுகளினால் இவ்வாறான சுகாதாரமற்ற முறையில் காய்க்றிகள் விற்பனை செய்யப்படுவத்தாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

.புனரமைக்கப்பட்டுவரும் இச்சந்தையின் பிரதான பாதையையும் வாய்க்கால் பகுதியையும் சீராக அமைத்து சுகாதாரத்துடனான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என நுகர்வோரும் வியாபாரிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(22.11.2011–செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 06 ஆம் நாள்.
இராகுகாலம் 3.10–4.40, சுபநேரம் 10.40 –12.10வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப . 8.52 வரை
திதி: துவாதசி மு.இ. 7.23 வரை

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணம் வரும், குடும்பத்தில் அமைதி, அயலார் உதவி, வெளியிலிருந்து நற்செய்தி, உடம்பு சுகம்.

ரிஷபம:–குடும்பத்தில் கவலை, காசுக்கஷ்டம், தொழில் வாய்ப்பு, திடீர் அதிர்ஷ்டம், உடம்பு பலவீனம்.

மிதுனம் :–பணம்வரும், குடும்பத்தில் கவலை, அதிகாரப்போட்டி, நினைத்ததைச் சாதித்தல், உடம்பு சுகம்.

கடகம்:– குடும்பத்தில் குழப்பம், பணக்கஷ்டம், நண்பர் உதவி, இனசன. அழைப்பு, உடம்பு பலவீனம்.

சிம்மம்:– பணம் வரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி, அயல்வீடு தொந்தரவு, நண்பர் உதவி, உடம்பு சுகம்.

கனனி :– குடும்பத்தில் அமைதி, காசுக்கஷ்டம், நண்பர்பர்கள் தொல்லை, அதிகாரப் போட்டி, மனச்சஞ்சலம்.

துலாம் :–பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, வீட்டில் வேலை, சுப காரியப் பேச்சு, உடம்பு சுகம்,

விருச்சிகம்:–குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், திடீர் பயணம், அவசர முடிவு, நண்பர் உதவி.

தனுசு:– சிந்தனைக்குழப்பம், பணக்கஷ்டம், குடும்பத்தில் சலனம், அயல் வீடுதொல்லை உடம்பு சுகம்.

மகரம:– தேவையற்ற பேச்சு, முறையில்லாத வழி மனசஞ்சலம், வீண் வாதம், உறவுவருகை.

கும்பம் :– பணம் வரும், தேவையற்ற செலவு, வீணான கோபம், அர்த்தமற்ற தீயசெயல், உடம்பு பலவீனம்,

மீனம் :– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும் தொழில் வாய்ப்பு தெய்வ தரிசனம், உடல்சுகம்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் 1125 மில்லி லீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த நபர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் ஏற்கனவே நீதிமன்றத்தினால் தண்டனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் மீளவும் குற்றச் செயலில் ஈடுபட்டதால் 2 மாத கட்டாய சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (உ-கே)

# சாயிபாபாவின் அவதார தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாலாவின் 86ஆவது அவதார தின நிகழ்வு நாளை புதன்கிழமை திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு அன்றையதினம் அதிகாலை 4.45 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதில் காலை 8மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றப்பட்டு தொடர்ந்து சாயி நாம பஜனை மற்றும் இசை நிகழ்வுகள் சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெறவுள்ளது. (உ)

# சிறப்புற இடம்பெற்ற நூற்றாண்டு விழா

(வவுனியா)

வவுனியா ஓமந்தை மத்தியகல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையில் அதிபர் மூத்ததம்பி அரசரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இரு அமர்வுகளாக இடம்பெற்ற நூற்றாண்டு விழா நிகழ்வுகளை பாடசாலையின் பழையமாணவர்கள், பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகம் இணைந்து நடத்தினர்.

காலை அமர்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவனும், கௌரவ விருந்தினர்களாக வட மாகாண கல்விப்பணிப்பாளர் பி. விக்கினேஸ்வரன், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர்ஆர். நந்தகுமாரும் மாலை நிகழ்வுகளுக்கு அதிதிகளாக வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளரும் இப்பாடசாலையின் பழைய மாணவனுமான ஏ. விமலேந்திரராசா, பழையமாணவர்களான வைத்திய கலாநிதி ஜெயாலினி, வைத்தியகலாநிதி பி. அச்சுதன், கலாநிதி ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நூற்றாண்டு விழாவின் போது பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன் இப் பாடசாலையில் கல்வி கற்று தற்போது பல்வேறு துறைகளிலும் பதவி வகிக்கும் பழைய மாணவர்கள் மற்றும் பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இவ்விழாவில் பல பொதுமக்களும் கலந்து விழாவை சிறப் பித்தனர் (125)

# க.பொ.த.(சா/த) சங்கீத பாட மாணவர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கா.பொ.த சாதாரண தர சங்கீத மாணவர்களுக்கான சங்கீத பாட கருத்தரங்கு எதிர்வரும் 23.24,25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.


இதில் 23ஆம் திகதி யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம் மற்றும் திருநெல்வேலி முத்துத் தம்பி மகாவித்தியாலயத்திலும், 24ஆம் திகதி யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யா/சென் சாள்ஸ் வித்தியாலயத்திலும், 25ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் காலை 8.30 மணிமுதல் மதியம் 2.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் அனைத்து சங்கீத பாட மாணவர்களும் தமது பகுதி பாடசாலைகளில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு யாழ். வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் த. இராசலிங்கம் அறிவித்துள்ளார். (எஸ்)



நெல்லியடியில் நடைபெற்ற டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணியில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் மேற்பார்வையில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் ஈடுபடுவதைக் காணலாம். (18)

# பெடரர் வெற்றி



(லண்டன்)


ஏ.ரி.பீ ரென்னிஸ் தொடரின் இறுதிச் சுற்று, குழுநிலைப் போட்டியொன்றில் சுவிட்ஸர்லாந்தின் ரொஜர் பெடரர் வெற்றியீட்டினார்.

குழு 'பி' இல் பிரான்ஸ்சின் ஜோவில் பிரட் சொங்காவை எதிர்கொண்ட பெடரர் 2-1 என்ற செட்கணக்கில் வெற்றியை தனதாக்கினார்.

போட்டியின் முதல் செட்டை 6 - 2 என்ற புள்ளிகள் அடிப்படையில் பெடரர் கைப்பற்றிய போதிலும், இரண்டாவது செட்டை 6 - 2 என சொங்கா வெற்றி கொண்டார்.

தீர்மானமிக்க மூன்றாவது செட்டில் திறமையை வெளிப்படுத்திய பெடரர் 6 - 4 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றினார்.

# உலகக் கிண்ணக் கபடிப் போட்டி 2 பிரிவிலும் இந்தியா சம்பியன்



(லூதியானா)

உலகக் கிண்ணக் கபடிப் போட்டியில் ஆண்கள், பெண்கள் என இரு பிரிவிலும் இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

உலகக் கிண்ணக் கபடிப் போட்டி பஞ்சாப் மாநிலத்தில் கடந்த 20 நாட்களாக நடந்து வந்து. 14 நாடுகளைச் சேர்ந்த ஆண்கள் அணியும், 4 நாடுகளைச் சேர்ந்த பெண்கள் அணியும் இதில் கலந்து கொண்டன. ஆண்கள் பிரிவு இறுதிப போட்டி இந்தியா, கனடா அணிகளுக்கு இடையே லூதியானாவில் நேற்று முன் தினம் இரவு நடந்தது.

ஆரம்பத்தில் இருந்தே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி முடிவில் 59-25 என்ற கணக்கில் கனடாவை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை வென்றது. வெற்றி பெற்ற இந்திய அணிக்கு ரூ.2 கோடி பரிசு கிடைத்தது. 2ஆம் இடத்தைப் பிடித்த கனடா அணியினர் 1 கோடி பரிசு பெற்றனர்.

இதேபோல் நேற்று முன்தினம் மாலை நடந்த பெண்கள் பிரிவு இறுதிப் போட்டியிலும் இந்தியா, அமெரிக்காவை 44-17 என்ற கணக்கில் வீழ்த்தியது. பேருந்து விபத்தில் காயம் அடைந்த நிலையிலும், இந்திய வீராங்கனைகள் சிறப்பாக விளையாடி, அமெரிக்க அணியினரை வீழ்த்தி வெற்றி பெற்றனர். பெண்களுக்கான உலகக் கிண்ணக் கபடிப் போட்டி இந்த ஆண்டே அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டெண்டுல்கருக்கு மகன் அறிவுரை

(மும்பை)

சர்வதேச கிரிக்கெட்டில் 100ஆவது சதம் அடிக்க வாய்ப்பை எதிர்நோக்கியிருக்கும் இந்திய அணியின் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு அவரது மகன் அறிவுரை கூறியுள்ளார்.


சதமடிக்கும் போது ஏற்படும் பதற்றத்தை தவிர்க்க 90 ஓட்டங்களை தாண்டிய உடன் அதிரடியாக சிக்ஸர் அடித்து விட வேண்டும் என்று சச்சினின் மகன் அர்ஜுன் அவரிடம் தெரிவித்துள்ளார்.

இந்திய துடுப்பாட்ட வீரர் சச்சின் தனது சர்வதேச 100ஆவது சதத்தை கடக்க வேண்டும் என்று அவரது ரசிகர்களின் எதிர்ப்பார்ப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஆனால் அதை எட்ட முடியாமல் சச்சின் தவித்து வரும் நிலையில் இன்று மும்பையில் ஆரம்பமாகும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான 3ஆவது போட்டியின் போதாவது சச்சின் 100 ஆவது சதத்தை எட்டி விடுவாரா என்று ரசிகர்கள் பெரிதும் எதிர்ப்பார்த்துள்ளனர்.

# சிறந்த வீரருக்கான சியட் விருது





(மும்பை)

இந்த வருடத்திற்கான சிறந்த சியட் விருதினை இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் ட்ரொட் பெற்றுக் கொண்டார்.


சியட் சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கான விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் மும்பையில் நடந்தது.

இதில், இங்கிலாந்தின் ட்ரொட்(சிறந்த வீரர் துடுப்பாட்ட வீரர்), மற்றும் அண்டர்சன் (சிறந்த பந்து வீச்சாளர்) இந்தியாவின் ஹோலி (இளம் வீரர்), ரெய்னா (ருவென்ரி-20 வீரர்), மேற்கிந்தியத்தீவு அணியின் முன்னாள் ஜாம்பவான் வோல்ஸ் (வாழ்நாள் சாதனையாளர்) உள்ளிட்டோர் விருதுகள் பெற்றனர்.

தவிர, லட்சுமண் (இந்திய கிரிக்கெட்டுக்கு ஆற்றிய சேவை), சேவக் (சர்வதேச கிரிக்கெட்டில் 10 ஆண்டு நிறைவு) சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# பொண்டிங் ஓய்வுபெற இதுவே சரியான நேரம்

## இயன் ஹீலி



(சிட்னி)

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் ஓய்வுபெற வேண்டும் என்ற கருத்து அவுஸ்ரேலியர்களிடையே வலுக்கத் தொடங்கியுள்ளது.

அவுஸ்ரேலியாவில் டிசம்பரில் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரோடு அவர் ஓய்வு முடிவை அறிவிக்க வேண்டும். அதுதான் சரியான தருணம் என்று முன்னாள் வீரர் இயன் ஹூலி தெரிவித்துள்ளார்.

இயன் ஹூலி கூறுகையில், இதற்கு முன் பொண்டிங் இவ்வளவு மோசமாக விளையாடியதைப் பார்த்ததில்லை. கடந்த 12 மாதங்களில அவர் மிக மோசமாக விளையாடியிருக்கிறார். வேறு யாரும் இவ்வளவு மோசமான சராசரியோடு நீண்ட காலம் விளையாடியதில்லை. அவர் ஓய்வுபெறுவதே சரியானது என நினைக்கிறேன். அவர் இப்போது சிறப்பாக விளையாடாமல் குறையுடைய வீரராகவே உள்ளார். எனவே அவர் ஓய்வை அறிவித்துவிடலாம்" என்றார். அதேநேரத்தில் அவுஸ்ரேலிய முன்னாள் கப்டன் அலன் போர்டர், இங்கிலாந்தின் முன்னாள் கப்டன் டோனி கிரேக் ஆகியோர் பொண்டிங்குக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# சந்தர்போல் சந்தேகம்

(மும்பை)

இந்தியாவுக்கு எதிராக இன்றைய தினம் இடம்பெற வுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சந்தர்போல் களமிறங்குவது சந்தேகத்திற்கிடமாகவுள்ளதாக மேற்கிந்தியத்தீவு அணியின் மேலாளர் தெரிவித்துள்ளார்.

சந்தர்பேோலின் கால் தசையில் சுளுக்கு ஏற்பட்டதால் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பயிற்சியில் அவர் பங்கேற்கவில்லை.

எனவே, இன்றைய தினம் மும்பையில் தொடங்கும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் சந்தர்போல் பங்கேற்பது கடினம் என்றும், இருப்பினும், முடிந்தளவு அவரை அணியில் இணைத்துக் கொள்வதே பலமாகும் என்று மேலாளர் பிலிப்ஸ் பூனர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லி டெஸ்ட் போட்டியில் சந்தர்போல் சதமடித்தார். இந்தியாவுக்கு எதிராக 23 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், 7 சதம் உட்பட 2,000 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

# பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சென் றோக்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ். கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்டத் தொடர் மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.




அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்த யாழ். பல்கலைக்கழக வீர, வீராங்கனைகள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது கரம் போட்டியில் சிறப்பாக செயற்பட்டு சாதனை புரிந்த யாழ். பல்கலைக்கழக கரம் அணித் தலைவி எஸ். வித்தியாதரணி துணைவேந்தரிடமிருந்து கேடயத்தைப் பெற்றுக் கொண்டபோது... (படப்பிடிப்பு :பா. சிகான்)

# தங்கக் கிண்ணக் கரப்பந்து ஆவரங்கால் இந்து தகுதி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடருக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி தகுதி பெற்றுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவினால் பிரதேச செயலகத்திற்குட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட மேற்படி போட்டித் தொடர் கடந்த 20ஆம் திகதி ஆவரங்கால் இராமலிங்கம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும், ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

மாவட்ட மட்டப் போட்டிகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெறும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (93)

# தென்மராட்சிப் பிரதேச தெரிவுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்துத் தொடருக்கான தென்மராட்சிப் பிரதேச மட்ட அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டித் தொடரில் பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து அணிகளையும் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்துமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (93)

## விளையாட்டுச் செய்திகள்

# சிறந்த கோலுக்கான உத்தேச வீரர் தேர்வு

இந்த ஆண்டுக்கான சிறந்த கோல் போட்ட வீரருக்கான பீபா புஸ்கா விருதுக்கான உத்தேச வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ரசிகர் தேர்வு விருதான இந்த விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள சிறந்த கோல்கள் பீபா இணையத் தளத்தில் வாக்களிப்புக்காக விடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வாக்களிப்புக்கு விடப்பட்ட இந்தப் பட்டியல் மீது டிசம்பர் 5ஆம் திகதி வரை ரசிகர்களுக்கு வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறது.

இந்த விருதைப் பெறும் வீரர் விபரம் வரும் ஜனவரி 9ஆம் திகதி சூரிச்சில் நடைபெறும் பீபா விருது விழாவின் போது அறிவிக்கப்படவுள்ளது. இந்த விருது விழாவில் ஆண்டின் சிறந்த கால்பந்து வீர, வீராங்கனைகளுக்கு விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மிக அவசரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய வடமாகாண கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம்

வடமாகாண கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் மிக அவசரமாக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கை கள் குறித்து யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த 19ஆம் திகதி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆராய்வுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திர சிறி அவர்களும் கலந்து கொண்டார். மூன்று மாதங்களுக்கு உட்பட்டதாக காலவரையறையை கொண்டு முன்னெடுக்கப்படும் விடயங்களை ஆராய்ந்து அதில் உடடினடியாகச் செயற்படுத்தும் விடயங்கள் குறித்து உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் வருமாறு:

**கல்விச் செயலாளர் நியமனம**

வடமாகாணத்தில் கல்விச் செயலாளராகக் கடமையாற்றும் எல். இளங்கோவன் ஆளுநர் அவர்களின் செயலாளர் ஆகவும் செயற்படுவதனால் கல்விக்கு தனிச் செயலாளர் நியமிக்கப்படல் வேண்டும் என்பது கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் 05.11.2011 அன்று எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானம் ஆகும். (வடமாகாணத்தில் 1044 பாடசாலைகளையும் அங்கு கடமையாற்றும் 14,400க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் 254,680 மாணவர்களையும் நிர்வகிக்கும் பொறுப்பு உள்ள பதவி செயலாளர் பதவி ஆகும்.)

(இது தொடர்பாக ஆளுநர் அவர்களுடன் கலந்துரையாடியதன் நிமிர்த்தம் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டது. எனவும் விரைவில் நியமனம் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.)

**பிரதி செயலாளர் நியமனம்**

வடமாகாண கல்வி அமைச்சுக்கான பிரதிச் செயலாளராகக் கடமையாற்றும் வி.ரி. செல்வரட்ணத்தின் சேவை 2012 தை மாதத்துடன் நிறைவு அடைவதால் உடனடியாக அவரது இடத்திற்கு SLEAS சேவையைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கவும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப் படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

**வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்**

கடந்த பல மாதங்களாக கீழ் வரும் கல்வி வலயங்கள் நிரந்தரக் கல்விப் பணிப்பாளர்கள் இன்றி செயற்பட்டு வருகின்றன. தற்காலிகமாகக் கடமையாற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் தீர்க்கமான முடிவுகள் எதனையும் எடுத்து செயற்பட முடியாதவர்களாக இருப்பதால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, துணுக்காய், மன்னார், முல்லைத்தீவு ஆகியவற்றில் நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளர்களை நியமிக்க உடன் நடவடிக்கை எடுப்பதாக முடிவெடுக்கப்பட்டது.

கணக்காளர் Accountant இல்லாத இடங்களான மாகாணக் கல்வித் திணைக்களம் வவுனியா தெற்கு வலயம், முல்லைத்தீவு வலயம், மடுவலயம், மன்னார் வலயம், கிளிநொச்சி வலயம் ஆகிய வற்றுக்கான நியமனங்களை பூர்த்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(இதற்கு தற்காலிகமாக நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களை நியமிக்க மாகாண பொதுச்சேவை அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது)

பொறியியலாளர்கள் Engineer இல்லாத இடங்களான மாகாணக் கல்வித்திணைக்களம், யாழ்ப்பாண மாவட்டம் (05 வலயங்கள் 430 பாடசாலை) மன் னார் மாவட்டம், வவுனியா மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகியவற்றுக் கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நிர்வாக அதிகாரி (A.O) இல்லாத இடங்களான வடமாகாணக் கல்வி அமைச்சு முல்லைத்தீவு வலயம், துணுக்காய் வலயம் ஆகியவற்றுக்கு டிசம்பர் 31க்கும் முன் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.


(7இடங்களில் தற்காலிக நிர்வாக உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.)

**கல்விப்பணிப்பாளர்கள் பற்றிய இன்றைய நிலை**

**SLEAS** வகுப்புI இல் உள்ளவர்கள்

எஸ்.செல்வராஜா - வடமராட்சி வலயம், எஸ். இராசேந்திரம் - வலிகாம வலயம்.

**SLEAS** வகுப்பு II இல் வலயக் கல்விப்பாணிப்பாளர்களாக உள்ளவர்கள்



வை. ரவீந்திரன் -யாழ். வலய்ம் (பதில்), எஸ். பிரேமகாந்தன் - தென்மராட்சி வலயம், எஸ். ராதாகிருஸ்ணன் - தீவகம் வலயம்,எஸ். பராசக்தி - வவுனியா வடக்கு வலயம், திருமதி .அன்ரன் சோமராஜா - வவுனியா தெற்கு வலயம்.

குருஸ் - மடு வலயம், க.முருகவேள் - கிளிநொச்சி வலயம் (பதில்), ரவல் - மன்னார் வலயம் (ஓய்வு நிலை இணைப்பு), மேகநாதன் - துணுககாய் வலயம் (ஓய்வு நிலை இணைப்பு)

**SLEAS** வகுப்பு II இல் வலயக் கல்விப்பணிப்பாளர்களாக இல்லாது கடமை செய்பவர்கள்.

எஸ்.உதயகுமார் - வடமராட்சி வலயம், எஸ். நந்தகுமார் - வடமராட்சி வலயம், எஸ்.புஸ்பலிங்கம் - வடமராட்சி வலயம், எஸ். சுந்தரசிவம்- வலிகாம வலயம் எஸ். தெய்வேந்திரராஜா - ஹாட்லிக் கல்லூரி. எஸ்.வரதராஜமுர்த்தி - வ.மா.கல்வி அமைச்சு, திருமதி இறேனியஸ் செல்வின் வ.மா.கல்வித்திணைக்களம், கே. ராதாகிருஸ்ணன் வ.மா. கல்வித் திணைக்களம், திருமதிஎஸ். சுகந்தி - மன்னார் வலயம், திருமதி எஸ்.மாலினி வெனிட்டன் -. மன்னார் வலயம், எஸ். சியான் - மன்னார் வலயம், ஜோன் குயின்ரஸ் - தீவக வலயம், கிருஸ்ணகுமார் - வடக்கு மாகாண கல்வி அமைச்சு.

**SLEAS** வகுப்பு IIக்கு தகுதி பெற்றவர்கள்

வ.சிறிஸ்கந்தராஜா - வ.மா. கல்வித் திணைக்களம், க.முருகவேல் - பதில் வலயக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.

**பிரதிக் கல்விப் பணிப்பாளர் நியமனம்**

வடமாகாணத்தில் சகல வலயக் கல்விப் பணிமனைகளிலும், மாகாணக் கல்வித் திணைக்களத்திலும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடம் காணப்படுகின்றது. குறிப்பாக, மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு நால்வரும் அதேபோன்று வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, துணுக்காய், கிளிநொச்சி, மடு போன்ற வலயங்களிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றது. இப்பதவி கல்விக்கான பொறுப்புக் கூறலில் தீர்க்கமான இடத்தில் உள்ளதால் இவ்வெற்றிடங்கள் 01-01-2012இற்குள் நிரப்ப உடனடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**உதவிக் கல்விப் பணிப்பாளர் (A.D.E) ஆசிரியர் ஆலோசகர் (I.S.A)**

05-11-11 இல் நடைபெற்ற கல்வி அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானத்தின்படி வலயங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள் வெற்றிடங்கள் நிரப்பப் படும்போது குறிப்பிட்ட பாடத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படவேண்டும்.

(தற்போது நிரப்பப்படாமல் உள்ள வெற்றிடங்களை 01-01-2012இற்கு முன் பொருத்தமானவர்கள் மூலம் நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது)

**அதிபர் நியமனம**

கீழ் வரும் பாடசாலைகளுக்கான அதிபர் வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படல் வேண்டும். காலம் தாழ்த்தப்படுவதனால் பாடசாலைகளில் நிர்வாகச் சிக்கல் ஏற்பட்டு, பாடசாலைகளின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றுது.

யாழ். யூனியன் கல்லூரி (17-11-2011இல் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது)

யாழ் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரிக்கு வெற்றிடங்கள் நிரப்படும்.

**சிற்றூழியர் நியமனம்**

வடமாகாணக் கல்வித் திணைக்களங்கள், பாடசாலைகளில் 2000இற்கும் மேற்பட்ட சிற்றூழியர் வெற்றிடங்கள் உள்ளன. இவை 01-01-2012இற்கு முன் உடன் நிரப்பப்படல் வேண்டும். இந்நியமனங்கள் செய்யப்படாததினால் பாடசாலையும், சுற்றுப்புறச் சூழலும் அசுத்தமடைவதுடன் பாடசாலைப் பராமரிப்பும் பாதிக்கப்படுகின்றது.

(இந்த நியமனங்களை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளிக்கப்பட்டது.)

குறிப்பு : பழைய ஆளணி ஒதுக்கீட்டின்படி வடமாகாணப் பாடசாலைகளுக்குரிய சிற்றூழியர் தேவை 1638 ஆகும். ஆனால், தற்போது உள்ள ஆளணியினர் 387 மட்டுமே.

**ஆசிரியர் வளத்தைச் சீர்ப்படுத்தலுக்கான இடமாற்றம்**

வடமாகாணத்தின் மாகாணப் பாடசாலைகள், தேசிய பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர் ஆளணி, தேவைப்படும் ஆசிரியர் ஆளணிகளின் விபரங்களை உரிய அதிகாரிகள் மூலம் திரட்டி ஆசிரியர்கள் உடனான ஒன்றுகூடல், கலந்துரையாடல் மூலம் இணக்கமானதும் நிபந்தனை மூலமானதுமான வளப்பகிர்வு உடனடியாகச் செய்ய ஆவன செய்வதன் மூலமே தரமான கல்வி மாணவர்களுக்குக் கிடைப்பதனை உறுதி செய்ய முடியும். மேற்படி வேலைத்திட்டத்தில் தொழிற சங்கப் பிரதிநிதிகளையும் இணைத்துச் செயற்படுதல் செயற்பாடு ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெறவுள்ளது.

**அதிபர், ஆசிரியர் இடமாற்றம்**

பாடசாலைகளில் தொடர்ந்து ஐந்து வருடங்களாகக் கடமையாற்றும் அதிபர்களையும், ஏழு வருடங்கள் கடமையாற்றும் ஆசிரியர்களையும் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு அமைய இடமாற்றம் செய்வது தரமான கல்விக்கும் சிறப்பான நிர்வாகத்திற்கும் அவசியமாகும். இது தொடர்பாக 05-11-2011இல் நடைபெற்ற கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது வருடாந்தம் நியம ஒழுங்கில் நடைபெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

(இச்செயற்பாட்டை ஜனவரி 15ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.)

**நிரந்தர நியமனம்**

வடமாகாணத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உரிய கடமைகளை, அதிபர் தரம் I இல் உள்ளவர்களும், ஆசிரியர் தரம் I இல் உள்ளவர்களும் கடமை நிறைவேற்றுநர்களாக இருக்கின்றனர். (இவர்கள் SLEAS பரீட்சைக்கு பல தடவை தோற்றி சிறந்த புள்ளிகளையும் பெற்றவர்கள். ஆளணி வடமாகாணத்திற்கான விசேட விகிதாசார பிரச்சினையால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுவது இல்லை. அழைத்தாலும் சிலவருக்கு மட்டுமே நிமயனம்) ஆனால் பதிற்கடமை ஆற்றுவோர் **SLEAS** அதிகாரிகளுக்கு உரிய கடமையே ஆறுக்கின்றனர். எனினும் நிரந்தமான அந்தப் பதவிக்குரிய சலுவைகள் எதனையும் அனுபவிக்க முடியாதுள்ளது. இந்த நிலையில் வடமாகாணத்தில் உள்ள 173இற்கு மேற்பட்ட பதிற்கடமையாளர்கள் நிரந்தரமாக்கப்படல் வேண்டும். இதற்கென விசேட **SLEAS** பரீட்சை நடாத்தப்பட்டு இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். குறிப்பாக, வடமாகாணத் திற்குரிய பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக கல்விப் பணிப் பாளர்களின் தேவையான ஆளணி 250 ஆகும். ஆனால் உரிய தகுதியுடன் 77 பேரே கடமையாற்றுகின்றனர்.

## பதிற்கடமை அதிபர்கள்

வடமாகாணத்தின் பாடசாலைகளில் பலர் பதிற்கடமை அதிபர்களாகப் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் நிரந்தரமாவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென 05-11-2011 அன்று நடைபெற்ற கல்விக் குழுக் கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம் எடுக்கப்பட்டது.. இலங்கை அதிபர் சேவைப் பரீட்சைகள் வருடந்தோறும் கிரமமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இது முழு இலங்கைக்குமான பிரச்சினை. ஆகவே மத்திய அரசுடன் பேசித் தீர்வு காணப்படும் என்றார். வடமாகாணத்தின் பாடசாலை களில் உள்ள அதிபர்களாக கடமையாற்றாத (தேசிய பாடசாலை உட்பட) அதிபர் தரம் பெற்றவர்கள் உடனடியாக பாடசாலைகளில் அதிபர களாக நியமிக்கப்படல் வேண்டும்.

**(மிகுதித் தீர்மானங்கள் நாளைய தினமுரசில்)**

# ஆணைக்குழு பரிந்துரையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்



(கொழும்பு)

**கற்றறிந்த பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் அறிக்கையில் இடம்பெறும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டும் என பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார். இது உண்மையில் சிறந்த விடயமாகும். ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதன் மூலம் அதில் உள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாட முடியும்.

மேலும் கடந்த செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெறற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 18 ஆவது கூட்டத் தொடரின்போது பல நாடுகள் தாங்கள் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கைக்காக காத்திருப்பதாக கூறியிருந்தன.

அந்த வகையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மிகவும் முக்கியமானதாகும். அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன இருப்பதை சர்வதேசத்துக்கு வெளிக்காட்டவேண்டும். அதாவது நாட்டில் மீண்டும் ஒருமுறை இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கும் வகையில் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மீண்டும் புலிகள் போன்ற அமைப்பு உருவாகாமல் இருக்க வேண்டும். இதற்கு ஏதுவாக ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமைந்திருக்கும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். இந்நிலையில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் எந்தளவு அர்ப்பணிப்புடன் இருக்கின்றது என்பதனை சர்வதேசத்துக்கு காட்டவேண்டியுள்ளது என்றும் கூறினார்.

# சவூதியில் துன்புறுத்தலுக்குள்ளாகிய இருபது பேர் நாடு திரும்பியுள்ளனர்



(கொழும்பு)

சவூதி அரேபியாவில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகிய நிலையில் சுமார் 20 இலங்கைப் பணியாளர்கள் நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சென்ற இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமை, எஜமானர்களின் துன்புறுத்தல்கள் மற்றும் விசா காலாவதியானமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த நிலையிலேயே திரும்பி வந்துளளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு திரும்பியுள்ள பணியாளர்களை அவர்களின் வீடுகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெங்கு உற்பத்தியை அதிகரிக்க மகாவலி அதிகாரசபை நடவடிக்கை

இலங்கையில் தென்னை உற்பத்தியினை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் இலங்கை மகாவலி அதிகார சபை ஈடுபட்டுள்ளது. இதன் அடிப்படையில் மகாவலி வலயங்களில் 7இலட்சம் தென்னங்கன்றுகளை நடும் பணி இடம்பெறுகின்றன. இதன் மூலம் தேங்காய் உற்பத்தியினை 12 சதவீதத்தால் அதிகரிக்க முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தெங்கு அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுத்துச் செல்லப்படும் ஆறு வருட திட்டத்துக்கு அமைய 3 கோடியே 65 இலட்சம் உற்பத்தி செய்ய முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

# துரோகி பட்டம் எனக்குக் கிடைத்தாலும் பயப்படமாட்டேன் என்கிறார் ஹிருனிகா



(கொழும்பு)

தமக்குத் துரோகிப் பட்டம் கிடைத்தாலும் கவலைப்படப் போவதில்லை என்று கொலையுண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருனிகா தெரிவித்துள்ளார்.

தமது தந்தையின் கொலை தொடர்பில் தாம் சர்வதேசத்தின் நீதியை கோருவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டால், இந்தத் துரோகிப் பட்டம் கிடைக்கலாம். ஆனால் அதனைப்பற்றி பயப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமது தந்தையின் கொலை தொடர்பில் இலங்கையில் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேசத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. தமது தந்தையின் கொலை தொடர்பில் இலங்கையின் ஆளும் கட்சி, நீதியை பெற்றுக்கொடுக்கவேண்டும். உண்மையை மறைக்க முயலக்கூடாது என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கனவே இலங்கை நீதியற்ற நாடுகளின் ஆசிய நிலை பட்டியலில் முன்னிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக உலக நாடுகளின் தலைவர்களும் இலங்கையின் வன்முறைகள் தொடர்பில் கேள்வி எழுப்புகின்றனர் என்றும் ஹிருனிக்கா தெரிவித்தார்.

இலங்கையின் நீதி நிர்வாகத்தை நிலைநாட்ட படித்த புதிய இளைய தலைமுறை தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பொலிஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கி பறிபோனது



(கொழும்பு)

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் மித்தெனிய நகரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கியை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் பறித்துச் சென்றுள்ளனர். இச்சம்பவவேளையில் மேற்படி கான்ஸ்டபிள் மற்றொரு கான்ஸ்டபிள் சகிதம் ரோந்து நடவடிக்கைக்காக நடந்துசென்று கொண்டிருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையர்களை கைது செய்வதற்காக தங்காலை பொலிஸ அத்தியட்சகர் சி.ஏ.வீதிசிங்கவின் பணிப்புரையின் பேரில் விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 1200 விரிவுரையாளர் பற்றாக்குறை

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 1200 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளதாகவும் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் நவரட்ண தெரிவித்துள்ளார்.

உயர்கல்விக்காக வெளிநாடு சென்றுள்ள சுமார் 500 பல்கலைக்கழக ஆசிரியர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தில் பேச்சாளர் கலாநிதி மஹிம் மெண்டிஸ் இது தொடர்பாக தெரிவிக்கையில்,

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் 25 சதவீதமான விரிவுரையாளர்களே கலாநிதிப் பட்டம் பெற்றவர்களாக உள்ள நிலையில் பல்கலைக்கழகங்கள் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் ஏனைய நாடுகளில், சர்வதேச தரப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டம் பெறாத எவரும் சேர்க்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

உலகின் தலைசிறந்த 30 பல்கலைக்கழகங்களில் நான்கு மட்டுமே ஆசியாவைச் சேர்ந்தவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரணில் மீது பாலியல் குற்றச்சாட்டு அதிருப்தியாளர் குழு முன்வைப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மீது அவருக்கு எதிரான தரப்பினரால் இருபது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து நீக்குவதற்கு முனையும் அணியினராலேயே இக்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதான இக்குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணத்தை தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணவர்த்தன அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவிடம் சமர்ப்பித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க மீதான குற்றச்சாட்டுக்களில் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒரு பாலுறவுக்கு வற்புறுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான புத்திக பத்திரனவை ரணில் விக்கிரமசிங்க ஒரு பாலுறவுக்கு வற்புறுத்திய போது, அவர் மறுத்திருந்த நிலையிலேயே கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து அவர் தற்காலிகமாக நீக்கப்பட்டதாக இக்குற்றச்சாட்டுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுக்களில் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகேயும், மேர்வின் சில்வாவும் தொலைகாட்சி விவாதம் ஒன்றில கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அக்கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குவதாக கூறிய விடயங்களும் ரணில் விக்கிரமசிங்க மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆதாரமாக இணைக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஆவணத்தில் ரோசி சேனநாயக்க, புத்திக பத்திரன, துனேஸ கங்கந்த, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், சந்திரா கங்கந்த, சிராலலக்திலக, பந்துலால் பண்டாரிகொட, லக்ஸ்மன் லனறோல் மற்றும் பலர் சாட்சிகளாக இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிறப்புச் சான்றிதழ் வழங்கல்

இந்திய அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் விநியோகிக்கும் திட்டம் நேற்றுமுனதினம் ஆரம்பிக்கப்பட்டது. முக்கியமாக சிறார்களுக்கும் குறித்த பிறப்புச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டன.

அசாதாரண சூழ் நிலைகளின் போது இடம்பெயர்ந்த அகதிகள் தவறவிட்ட மற்றும் பிறப்புச் சான்றிதழ்களை பெற்றிராதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தென்னிந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வடிவேல் கிருஷ்ண மூர்த்தி தலைமையிலான இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் 13 அதிகாரிகள் குறித்த நடவடிக்கையில் கலந்து கொண்டனர்.

இலங்கை அகதிகள் தம் தாயகம் திரும்புவதற்கு கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு பிறப்புச் சான்றிதழ் பெரிதும் துணை புரியும் என இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதன்படி, அகதி முகாம்களில் பிறந்த சுமார் நூறு குழந்தைகளுக்கு இதன்போது பிறப்புச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விரிவான அரசியல் கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## கரு ஜயசூரியவிடம் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)


விரிவான ஓர் அரசியல் கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அரசாங்கத்தினால் இழைக்கப்படும் அநீதிகளை எதிர்கொள்வதற்கு விரிவான அரசியல் கூட்டமைப்பு ஒன்றை எதிர்க்கட்சிகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெள்ளைக் கொடி வழக்கில் மூன்றாண்டு காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சரத் பொன்சேகாவை, ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்று முன்தினம் சிறைச்சாலையில் சந்தித்துள்ளார்.

இதன்போது விரிவான அரசியல் கூட்டமைப்பு ஒன்றை எதிர்க்கட்சிகள் உருவாக்க வேண்டியதன் அவசியத்தை சரத் பொன்சேகா வலியுறுத்தியதாக கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார். சரத் பொன்சேகாவிற்கு தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக கரு ஜயசூரியவே அவரை பார்வையிட்டுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து கரு ஜயசூரியவிற்கும், சரத் பொன்சேகாவிற்கும் இடையில் 45 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக சிறைச்சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# உலகப்போர் ஏற்பட்டாலும் அதனை எதிர்நோக்கக் கூடிய நிலையில் இலங்கை



(கொழும்பு)

ஈரான் மீது மேற்குலக நாடுகள் தாக்குதல் நடத்தினால் மூனறாம் உலகப் போர் ஏற்படுவதனை தடுக்க முடியாது என்றும், உலகப் போர் ஏற்பட்டால் அதனை எதிர்நோக்கத் தயார் எனவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். இவ்வாறான ஓர் சூழ்நிலையினை எதிர்நோக்க இலங்கை தயார் நிலையில் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடுவெல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் இதனைக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக உலகப் போர் ஏற்பட்டால் நாட்டில் ஏற்படக் கூடிய உணவுப் பற்றாக்குறையைத் தீர்கக் கூடிய திட்டங்கள் காணப்படுகின்றது. நாட்டின் விவசாயத் துறையை மேம்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 13 மாணவர்களுக்கு வைரஸ் காய்ச்சல்

ஊவா உடற்கல்வி பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 13 பேர் நேற்று முன்தினம் மாலை திடீரென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒருவகை வைரஸ் காய்ச்சலால் இம்மாணவர்கள் பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 13 பேரில் 7 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த 7 பேரும் குணமடைந்து வருவதாக பண்டாரவளை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

# படுகொலைகளில் ஈடுபட்ட இருவர் 22 வருடங்களின் பின்னர் கைது

(கொழும்பு)

கண்டி - ஹதரலியத்த காவல் துறைப் பிரிவில் பல்லேகொட்டுவ பிரதேசத்தில் 1989 ஆம் ஆண்டு வன்முறைச் சம்பவங்களின் போது இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் தொடர்பில் 2 சந்தேகத்திற்குரியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.குறித்த நபர்கள் 22 வருடங்களின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவர்கள் கலகெதர - ஹதரலியத்த - பல்லேகொட்டு பிரதேசத்தில் வசிப்பவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கைதானவர்கள், வன்முறைகளின் போது கொல்லப்பட்ட ஒருவரின் மனைவியும், அவரின் உறவினர் ஒருவமே என்று தெரியவந்துள்ளது.

குறித்த பெண்மணி பிறிதொருவருடன் பேணி வந்த இரகசியத் தொடர்பு காரணமாக அந்த மனிதர் படுகொலை இடம்பெற்றதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. மனைவியாலும், உறவினராலும் கோடரியால் தாக்கப்பட்டே குறித்த நபர் பலியானார்.

கடந்த ஒருவருடத்திற்கு முன்னர் மனைவியின் உறவினர், மதுபோதையில் இருந்த போது குறித்த படுகொலை தொடர்பில் பிரிதொருவரிடம் இரகசியத்தை வெளிப்படுத்திய நிலையிலேயே விசாரணைகளுக்கான தகவல் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# மன்னாருக்கு கொண்டுவரப்படும் புனிதரின் பரிசுத்த பண்டம்



(கொழும்பு)

இந்தியாவிலிருந்து கடந்த 19ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட புனித டொன்பொஸ்கோவின் பரிசுத்த பண்டம் எதிர்வரும்25 ஆம் திகதி மன்னாருக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி நண்பகல் ஒரு மணிக்கு மடுச்சந்திக்கு கொண்டுவரப்பட்டு பின் மாலை 2 மணிக்கு மன்னார் முருங்கன் டொன்பொஸ்கோ மண்டபத்தில் வைக்கப்படவுள்ளது.

அன்றையதினம் மாலை 6 மணிக்கு மன்னார் செபஸ்ரியார் பேராலயத்திற்கு கொண்டுவரப்பட்டு இரவு திருவிழிப்பு நடைபெறவுள்ளது. மறுநாள் 26ஆம் திகதி காலை 6 மணிக்கு செபஸ்ரியார் பேராலயத்தில் திருப்பலிப் பூசை நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து புனித டொன்பொஸ்கோவின் பரிசுத்த பண்டம் அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு வவுனியா தூய அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.

# நாட்டுக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் செய்தி வெளியிடுவோருக்கு மேர்வின் எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் அவதூறு ஏற்படும் வகையில் தகவல்களை வெளியிட்டால் ஊடகவியலாளர்கள் சவப்பெட்டி ஒன்றை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டுமென மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்டுநாயக்க பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலச் சூழலில் சில ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் எந்த வகையிலும் திருப்தி அளிக்கும் வகையில் அமையவில்லை. நாட்டின் முக்கிய நபர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையில் பொயயான தகவல்களை உருவாக்கி சில ஊடகவியலாளர்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

டொலர்களைப் பெற்றுக்கொளளும் நோக்கில் அரசாங்கத்திற்கு எதிராகத் தகவல்களை வெளியிடுகின்றனர். எமக்கு எதிராகவும் சிலர் இவ்வாறான சேறு பூசல் நடவடிக்கையில் ஈடுபட்டுகின்றனர். அவற்றுக்கு ஒருபோதும் அஞ்சப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் முதலீடு செய்ய விரும்பும் தென்னாபிரிக்கா

(கொழும்பு).

தென்னாபிரிக்காவின் முதலீட்டாளர்கள் சிலர் இலங்கையில் முதலீடு செய்ய விரும்புவதாக தென்னாபிரிக்க நல்லிணக்க மற்றும் சர்வதேச உறவுகள் அமைச்சர் இப்ராஹிம் இஸ்மாயில் தெரிவித்துள்ளார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான வியாபார மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக இந்தக் கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்குமிடையே சுற்றுலாத்துறையை விருத்தி செய்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூடான் துறைமுகத்தில் இலங்கைக் கப்பல் நிலுவைப் பணம் செலுத்தாததால் நெருக்கடி

(கொழும்பு)

சூடானிலுள்ள துறைமுகமொன்றுக்கு அருகே நங்கூரமிடப்பட்டுள்ள லங்கா மஹபொல கப்பல் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முடியும் என கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசாத் கல்ஹேன கூறியுள்ளார்.

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான லங்கா மஹபொல கப்பல் நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் சூடானிலுள்ள துறைமுகம் ஒன்றுக்கு அருகே நங்கூரமிடப்பட்டுள்ளது. இந்தக்கப்பல் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த நிறுவனம் சூடான் துறைமுகத்திற்கு வழங்க வேண்டிய நிலுவைக் கட்டணத்தை செலுத்தத் தவறியதால் லங்கா மஹபொல கப்பல் துறைமுகத்திற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதியை அந்த நாட்டு அதிகாரிகள் மறுத்துள்ளதாக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் சுனில் ஒபாதகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் கப்பல் பணியாளர்களைக் கொண்ட குறித்த கப்பலின் பிரதம பொறியியலாளருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி




யிட்டுள்ளன. கப்பல் பணியாளர்கள் உணவு பற்றாக்குறையால் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

# நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மனோகணேசனுக்கு வழங்க மாட்டோம்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கு தமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் எவையும் இடம்பெறவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மனோ கணேசனை தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக தமது கட்சிக்கு உள்வாங்க வேண்டிய தேவை ஏதும் ஏற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தற்போது கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ள டி.எம்.சுவாமிநாதன் மற்றும் ஆர்.யோகராஜன் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்று எந்தக் கோரிக்கையும் எழவில்லை என்பதனையும் கட்சியின் அமைப்பாளர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டார்.

# வடமாகாண விவசாயிகளினுடைய பொருளாதாரம் மேம்படுத்தப்படும்

## அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன

(கொழும்பு)

வடமாகாண விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அவர்களுக்கு நவீன வசதிக்ள் வழங்கப்படுவதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்தயாப்பா அபேயவர்தன தெரிவித்துள்ளார். இதற்காக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் பல நவீன வசதிகளைக் கொண்ட உபகரணங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

நோர்வே, அவுஸ்ரேலியா மற்றும் சுவிஸ்சர்லாந்து ஆகிய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் உலக உணவுத் திட்டம் இந்தப் பொருட்களை வழங்கியுள்ளது.

விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளில் 30 சதவீதமானவை பல காரணங்களினால் விரயமாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தடுக்கும் நோக்கில் நெல் சேமித்து வைப்பதற்கான களஞ்சியத் தொகுதி அரிசி மா உற்பத்தி செய்யும் இயந்திர சாதனங்கள் உட்பட பல வகையான நவீன வசதிகளைக் கொண்ட உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் வட பிராந்தியத்தைச் சேர்ந்த 22 கிராமங்களில் உள்ள 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாகப் பயன் அடைவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே.வி.பி.கிளர்ச்சிக்குழு அடுத்த மாதம் தனிக் கட்சி

(கொழும்பு)

ஜே.வி.பி. கிர்ச்சிக்குழு வரைவில் தனிக்கட்சி ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும். கிளர்ச்சிக் குழு உறுப்பினர்கள் எதிர்வரும் மாதமளவில் புதிய இடதுசாரிக் கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளர்ச்சிக் குழுவைச் சேர்ந்தவர்கள் உத்தியோகபூர்வமாக வரும் மாதம் ஜே.வி.பியை விட்டு பிளவடைந்து செல்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சி நிர்வாகக் கட்டமைப்பைத் தீர்மானிக்கும் நோக்கில் பொதுச் சபைக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், கிளர்ச்சிக் குழு உறுப்பினர்கள் கட்சிக்கு பெயர் ஒன்றை இன்னமும் நிர்ணயிக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

## அபராதம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மது போதையில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற நபருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுதது்க் கொண்ட நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபருக்கு7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (உ,கே)

# தமிழில் முதல் முஸ்லிம் பெண் எழுத்தாளர்!

'**கா**தலா, கடமையா?' விறுவிறுப்பான ஒரு தமிழ் நாவல். தமிழ் தாத்தா டாக்டர் உ.வே.சாமி நாதய்யர், 1938 பெப்ரவரியில், அந்த நூலுக்கு மதிப்புரை எழுதினார்... "சமீப காலத்தில், நாகூர் சித்தி ஜுனைதா பேகம் என்ற பெண்மணி எழுதிய, 'காதலா, கடமையா?' என்ற தலைப்புடன் கூடிய அபிநவ கதையை நான் பார்த்த போது, எனக்கு மிக்க மகிழ்ச்சியும், வியப்பும் உண்டாயின. மகம்மதியர்களுக்குள்ளும் தமிழ் நூல்களைப் பயின்றுள்ள பெண் மக்கள் இருக்கின்றனர் என்பதை இப்புத்தகம் நன்கு விளக்குகிறது.

இதன் நடை யாவரும் படித்தறிந்து மகிழும்படி அமைந்திருக்கிறது. கதை போக்கும் நன்றாக உள்ளது. இடையிடையே பழைய நூல்களிலிருந்து மேற்கோள் கொடுத்திருப்பது, இந்நூலை எழுதியவருக்கு தமிழ் இலக்கிய நூல்களில் நல்ல பயிற்சி உண்டு என்பதைக் காட்டுகிறது!"

தமிழில், முதல் முஸ்லிம் பெண் எழுத்தாளரான சித்தி ஜுனைதா, 21 வயதில், 'காதலா, கடமையா?' நாவலை எழுதினார். மூன்றாம் வகுப்பு வரை தான் படிப்பு. அனுபவப் படிப்பே படைப்புத் திறனுக்கு காரணம் என்று எழுதி வைத்திருக்கிறார். அன்றாடம் நாட்குறிப்பு எழுதும் பழக்கம் உள்ளவர் இவர்.

சித்தி ஜுனைதா, 1917 இல் நாகூரில் பிறந்தார். 16 வயதில் எழுதத் தொடங்கினார். 'காதலா, கடமையா?' 18 அத்தியாயங்களைக் கொண்ட சரித்திரப் புதினம். மதுரை பின்னணியில் எழுதப்பட்ட, இந்த நாவலை, எழுத்தாளர் புதுமைப்பித்தன் விமர்சித்து எழுதியுள்ளார். 'முஸ்லிம் பெண்டிர் எழுத முன் வருவதை நாம் வரவேற்கிறோம்...' என்று அவர் பாராட்டினார்.

இந்த நாவலின் கதைச் சுருக்கமே எம்.ஜி.ஆர்., நடித்த, 'நாடோடி மன்னன்' திரைப்படத்திற்கு மூலக் கதையாக அமைந்தது என்று கூறப்பட்டது. அதற்கு கதை, வசனம் எழுதிய ரவீந்தர் இதை ஒப்புக் கொண்டார். நாகூரைச் சேர்ந்த ரவீந்தரின் இயற் பெயர் காஜா முகைதன். 'சண்பகவல்லி தேவி அல்லது தென்னாடு போந்த அப்பாசிய குலத் தென்றல்', சித்தி ஜுனைதா எழுதிய விறுவிறுப்பான குறுநாவல். 1947 ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட இந்த நூலுக்கு சுருக்கமான முன்னுரையை எழுதியிருக்கிறார்.

'சரிதைகளையும் சமூகச் சீர்திருத்த நவீனங்கள், கட்டுரைகள், சிறுகதைகள் முதலியவைகளையும் புதுமுறையில் எழுதி வெளியிட முயற்சிக்கிறோம். இத்தகைய பணி, ஆண் மக்களை விட, பெண் மக்களுக்கே ஏற்புடையது. ஆண் மக்கள் ஜாதி சமயத்தால் தூண்டப்பட்டு, சரித்திர உண்மைகளை மறைத்தும், திரித்தும் எழுதலாம். பெண் மக்கள் இயல்பாகவே ஆழ்ந்து சிந்திக்கும் மனத்தன்மையும், இரக்கமும் உடையவர்கள். எனவே, புத்துலகம் - புது மாற்றம் விழையும் முஸ்லிம் உலகம் - மறுமலர்ச்சி விரும்பும் தமிழர் தம் நாடு பெண் எழுத்தாளர்களை வரவேற்குமாக!'

நாவல்களுடன் தொடர்கதைகளையும், சிறுகதைகளையும், அவர் காலத்துக்கு ஏற்ற பாணியில் பத்திரிகைகளில் எழுதினார். பல கட்டுரைகளின் தொகுப்பு நூலாக, 'இஸ்லாமும், பெண்களும்' வெளிவந்தது.

அவருடைய சொந்த வாழ்க்கை எப்படி?

12 வயதில் திருமணம். கணவர் பகீர் மாலிமாருடன் நான்கைந்து ஆண்டுகளே வாழ்ந்தார். நான்கு பெண் குழந்தைகளைப் பெற்று, விதவையானார். பிறகு, எழுத்தும், படிப்பும், பிள்ளை வளர்ப்புமே சித்தி ஜுனைதாவின் வாழ்க்கையாகி விட்டது.



இவருடைய தம்பிகளும் பிரபலமானவர்கள். ஒருவர், இன்றைய கவிஞர் நாகூர சலீம். பிரபலமான எழுத்தாளராக, திரைப்பட வசன கர்த்தாவாக விளங்கிய தூயவன் - அக்பர் இன்னொரு தம்பி. வசனகர்த்தாவாகவும் தயாரிப்பாளராகவும் அவர் இருந்தார். தூயவனின் துணைவியே எழுத்தாளர் கே.ஜெய்புன்னிசா.

"காதலா, கடமையா?" நாவலையும், மற்ற படைப்புகளையும் ஒரு தொகுப்பாக வெளியிட்டுள்ளார் சித்தி ஜுனைதாவின் தங்கை மகன் நாகூர் ரூமி. 82 வயதில், (19.3.1998) காலமாவதற்கு நான்கு, ஐந்து நாட்களுக்கு முன் வரை, சித்தி ஜுனைதா சலிப்பில்லாமல் எழுதிக் கொண்டும், படித்துக் கொண்டும் இருந்தார்.

- ஜே.எம்.சாலி

# பெட்ரோலுக்குப் பதிலீடு வந்துவிடுமா?



"**பெ**ட்ரோல் விலை உயர்வை நினைத்து நினைத்து கவலைப் பட்டது போதும்! இனி "மீத்தேன் ஹைட்ரேட்" டுக்கு மாறுங்கள்" என்று அழைக்கிறது விஞ்ஞான உலகம். மீத்தேன் ஹைட்ரேட் ஒரு நேரடி எரிபொருள். அதை அப்படியே பயன்படுத்தலாம்.

பெட்ரோல் எப்படி கிடைக்கிறது? முதலில் பூமிக்கு அடியில் இருந்து கச்சா எண்ணெயை எடுக்கிறார்கள். பின் அதனை பல நிலைகளில் சுத்திகரித்தபின்தான் பெட்ரோலிய பொருட்கள் நமக்கு கிடைக்கிறது.

மீத்தேன் ஹைட்ரேட் விஷயத்தில் இந்த அவஸ்தையெல்லாம் கிடையாது. சுத்திகரிப்பு பிரச்சனையோ, கூடுதல் செலவுகளோ இதில் இல்லை. பார்ப்பதற்கு பனிக்கட்டி போல் தெரியும் இதனை கற்பூரம் போல் அப்படியே எரியவிடலாம்.


பிறகென்ன? பெட்ரோலை ஓரங்கட்டிவிட்டு மீத்தேன் ஹைட் ரேட்டுக்கு மாறிவிட வேண்டியதுதானே என்கிறீர்களா...? அங்கே தான் சிக்கலே இருக்கிறது. இது அத்தனை சுலபத்தில் கிடைப்பதில்லை. மிக மிகக்குறைவான வெப்பநிலையில்தான் இதைப் பார்க்க முடியும் நமது கடலின் அடி ஆழத்தில் உள்ள அடுக்குகளில் "மீத்தேன் ஹைட்ரேட்" ஏராளமாக புதைந்து கிடக்கிறது.

நமக்குத்தான் இது புதிய செய்தி. ஆனால் இது குறித்து விஞ்ஞானிகள் பல வருடங்களாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். 2002 ஆம் ஆண்டு முதல் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் இந்தியா ரஷ்யா கூட்டு முயற்சியாக இந்த ஆய்வுகள் நடந்து வருகின்றன.

கடலுக்கு அடியில் உள்ள வண்டல் பதிவுகளில் பாக்டீரியாக்கள் வேதிவினை நிகழ்த்தும்போதுதான் "மீத்தேன் ஹைட்ரேட்" உருவாவதாக சொல்கிறார்கள். அங்கிருக்கும் வெப்பநிலை, அழுத்தம் இரண்டும் இதை பத்திரமாக பாதுகாத்து வைக்கிறது.

இதை நாம் சட்டென்று கடலுக்கு மேலே தரைக்கு கொண்டு வர முடியாது. மேலே உள்ள வெப்பநிலையில் "மீத்தேன் ஹைட் ரேட்" நிலையாக இல்லாமல் சிதைந்துவிடும். அதன் பின் அதை எரிபொருளாக பயன்படுத்த முடியாது. அதனால்தான் இந்த விஷயத்தில் எதுவும் செய்ய முடியாமல் விஞ்ஞானிகள் திணறுகிறார்கள். "மீத்தேன் ஹைட்ரேட்"டை கடலுக்கு அடியில் கண்டுபிடித் ததே ஒரு சவால். அதன்பின் அதை சிதையாமல் மேலே கொண்டு வந்து எரிபொருளாக பயன்படுத்துவது இரண்டாவது சவால். இதற்காக நூற்றுக் கணக்கான கோடி ரூபா செலவில் பல்வேறு ஆய்வுகள் நடந்து வருகின்றன.


"மீத்தேன் ஹைட்ரேட்" விஷயத்தில் இந்தியாவும் ரஷ்யாவும் மிக ஆர்வமாக உள்ளன. காரணம், இந்த நாடுகளின் கடலோர பகுதியில் ஏராளமான "மீத்தேன் ஹைட்ரேட்"கள் உள்ளதாக சொல்கிறது தகவல். இது உண்மையானால், இந்தியா எரிபொருள் துறையில் உலகின் மிகப் பெரிய வல்லரசாக ஆதிக்கம் செலுத்தும். கடலுக்கடியில் புதைந்து கிடக்கும் இந்த புதையல் கைக்கு எட்டுமா? பெங்களூரில் நடைபெறும் ஆய்வுகள்தான் முடிவு சொல்ல வேண்டும். அதுவரை பெட்ரோலுக்கு அதிக விலை கொடுத்துத்தான் ஆக வேண்டும்.




# ஜப்பான்... அளக்க முடியாத கதிர் வீச்சு

**ச**மீபத்தில் டோக்கியோவில் பல இடங்களில் கதிர் வீச்சு அளவு ஏற்க முடியாத அளவு உயர்ந்திருப்பதாகத் தெரிய வந்ததும் ஜப்பானியர்கள் கொஞ்சம் அரண்டிருக்கிறார்கள். /ப்குஷீமா அணு உலை உள்ள ஊரிலிருந்து டோக்கியோ ஒன்றும் அருகில் இல்லை. பறவை பறக்கும் விதத்தில் 238.34 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. சாலை வழியே சுமார் 274.10 கிலோமீற்றர் அல்லது 297.92 கிலோமீற்றர் தூரம். மைல் கணக்கில் இது 148.1 மைல். இவ்வளவு தூரத்தில் எப்படிக் கதிர் வீச்சு கடந்தது என்று இப்போது தலைமுடியைப் பிய்த்துக் கொள்கிறார்கள். ஒரு காரணமாக மகரந்தத் தூள்கள் காற்றில் பறந்து வருவது சொல்லப்படுகிறது. இன்னொன்று சமீபத்தில் பெய்த மழையில் இருந்த மஞ்சள் நிற நீர், இதே மகரந்தத் தூள்கள் /ப்குஷீமா பகுதியில் இருந்து காற்றில் கலந்து மழையோடு கலந்து டோக்கியோவில் பெய்திருக்கலாம் என்கிறார்கள். இதனால் ஒரு அறிவியலாளர் ஜப்பானில் இருந்து வரும் வசந்தத்துக்குள் வெளியேற முடிகிறவர்களெல்லாம் வெளியேறி விடுதல் நலம் என்கிறார். பாவம் ஜப்பானியர். உலகின் மிகப் பெரும் பொருளாதார சக்தி, பொறியியல் நுட்பத்தின் உச்சத்தில் உள்ள ஒரு நாட்டில் ஒரே விபத்தில் அனைத்தும் தலைகீழ் விகிதங்களாகி விட்டன.

# மனநிறைவும் பாரமும்!



**மு**தன்முறையாக தாஜ் மகாலைப் பார்த்தபோது அதன் அழகில் மனம் பறிகொடுத்து அப்படியே ஒருகணம் நின்று விட்டேன். தொடர்ந்து பார்த்தபடியே இருக்கும் ஆசையில் யாருக்கும் தொந்தரவு தராதவகையில் நடை பாதையை விட்டுவிலகி நின்று பார்க்கத் தொடங்கினேன். திரும்பிய கணத்தில் கைக்குட்டை விற்கிற ஒரு சிறுமியின் மீது பார்வை படிந்தது. பயணியர் அனைவரும் வளாகத்தில் நுழைந்த கணத்திலிருந்து தாஜ் மகாலின்மீது வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்த படியே இருக்க, அவள் பார்வை மட்டும் அந்தப் பயணி யர்மீதே இருந்தது. "மூணு ரூபாய்க்கு ஒன்னு, பத்து ரூபாய்க்கு நாலு" என்று மந்திரம்போல திரும்பத் திரும்பச் சொன்னபடி புதுப்புதுப் பயணியரை நாடி நடந்துகொண்டே இருந்தாள்.



பார்வையாளர்கள் அனைவரையும் ஈர்த்திழுக்கிற உலக அதிசயம் அவளை ஒரு விழுக்காடு அளவுகூட அசைக்கவில்லை. அந்தத் திசையைக் கூட அவள திரும்பிப் ப்ர்க்கவில்லை. கைக்குட்டைகளை வாங்கும் முகத்தை அந்தக் கூட்டத்தில் கண்டுபிடிப்பதிலேயே அவள் பார்வை குறியாக இருந்தது.

திரும்பி நடந்தபோது தாஜ்மகாலைக் கண்டு களித்த நினைவுகளுக்கு இணையாக அவள் நினைவும் வந்தபடி இருந்தது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் பாட்டை ஒருமுறை மனம் சொல்லிக்கொண்டது. பசியை அண்ட விடாமல் இருப்பதற்கும் அண்டிவிட்ட பசியைத் துரத்துவதற்கும் அச்சிறுமி நடத்தும் போராட்டம் வேதனையானது.

வயிறு குளிர்ந்தால்தான் மனம் வேறு திசையில் திரும்பும். அக்கினியாக கொழுந்துவிட்டு எரியும் வயிற்றோடு மனத்தை எந்தப் புள்ளியின்மீதும் குவிக்கமுடிவதில்லை.

இதற்குப் பிறகு பல இடங்களில் இப்படிப்பட்ட காட்சிகளை பல முறை பார்க்க நேர்ந்ததுண்டு. கண்களைக் கவரும் சிற்பங்களைக் கொண்ட கோயில் வளாகங்கள், மலைப்பாதைகள், பழங்கால கோட்டை வாசல்கள், கடற்கரைகள், அடிவாரங்கள், அருவிக்கரைகள், ஆற்றங்கரைகள் எல்லா இடங்களிலும் கண்நிறைய பற்றியெரியும் பசியோடு பொம்மைகளையும் கைக்குட்டைகளையும் பஞ்சுமொட்டுகளையும் பிஸ்கட் பாக்கெட்டுகளையும் தண்ணீர் பாக்கெட்டுகளையும் வாங்கிக்கொள்ளச் சொல்லி விடாமல் பின்தொடர்கிற சிறுமிகளையும், சிறுவர்களையும், பெண்களையும் பார்க்க நேர்ந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்த்த மனநிறைவும் அதற்கு நிகரான மனபாரத்தையும் சுமந்தபடி ஊர் திரும்புவது வழக்கமாகிவிட்டது.

- பாவண்ணன்

# தேசியத்தின் தீவிரவாதக் குரல்

இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் மூலோபாயம் இலங்கை அரசினைப் பாதுகாப்பதுதான். கால அரசியல் சூழ்நிலைகளையொட்டி இப்பாதுகாப்பு நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படலாம். போரின் போது மறைமுகமாகப் பாதுகாத்த இந்திய அரசு, போரின் பின்னர் நேரடியாகப் பாதுகாத்தது. ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் மேற்கு நாடுகள் கொண்டு வந்த போர்க்குற்றப் பிரேரணை தோல்வியடைந்ததற்கு இந்தியாவே காரணம்.



ஆனாலும் பின்னர் ஐ.நா நிபுணர் குழு அறிக்கை, சனல்-4 காணொளித் தொகுப்பு, ஜெயலலிதாவின் எழுச்சி, தமிழ் நாடு தமிழ் உணர்வாளர்களின் தீவிர காங்கிரஸ் எதிர்ப்பு பிரசாரம் என்பவற்றினால் நேரடியாகப் பாதுகாக்கும் முயற்சியை சற்று அடக்கி வாசித்தது.

இறுதியாக நடைபெற்ற ஐ.நா மனிதஉரிமைக் கவுன்சில் கூட்டத்தில் மௌனம் காத்தமை, ஐ.நா பொதுக்கூட்ட சந்திப்பின் போது "இனப்பிரச்சினையை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என மன் மோகன் சிங் ஜனாதிபதி மகிந்தரிடம் கூறியமை என் பவையெல்லாம் இந்த அடக்கி வாசித்ததன் விளைவு தான்.

எனினும் சீனப்படைத் தளபதிகளின் இலங்கை வருகையும் கூட்டுப் பயிற்சி அழைப்பும் இந்த அடக்கி வாசித்தலை முடிவிற்கு கொண்டு வந்தது. இனி சில காலங்களுக்கு நேரடிப் பாதுகாப்புத் தொடரலாம்.

அவுஸ்ரேலிய பொதுநலவாய மாநாட்டில் இலங்கை மீது விழ இருந்த எறிகணைகளை கவசம் போல நின்று இந்தியா பாதுகாத்தது. இந்தியக்கவசம் இல்லையென்றால் அடுத்த மாநாட்டினை இலங்கையில் நடாத்தும் வாய்ப்பு ஜனாதிபதிக்கு ஒருபோதும் கிட்டியிருக்காது. இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுக்கின்ற மனிதஉரிமை ஆணையாளர் பதவியும் உருவாக்கப்பட்டிருக்கும்.

போர்க்குற்ற விவகாரத்தில் ஐ.நா நம்பகத்தன்மை கேள்விக்குள் ளானது போல, பொதுநலவாய நாடுகளின் நம்பகத்தன்மையும் கேள்விக்குள்ளாகியுள்ளது. மனித உரிமை அமைப்புக்கள் தான் மீண்டும் மனந்தளராத விக்கிரமன் போல புதிய, புதிய முயற்சிகளை மேற்கொள்கின்றன.

சனல்-4 இன் இரண்டாவது காணொளி, சித்திரவதைகளுக்கெதிரான கூட்டம் என அவற்றின் முயற்சிகள் தொடருகின்றன. வல்ல ரசுகளின் அரசியல் நலன்களுக்கு முன்னே மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ச்சியாகத் தோல்வியடைவதுதான் அவர்களைப் பொறுத்தவரை மிகப்பெரிய சோகம்.

இவற்றின் வற்புறுத்தல்களினால் மேற்குலகம் சற்று அழுத்தங்களைக் கொடுக்க முன்வந்தாலும் அவை இந்தியாவைத் தாண்டி வருகின்றபோது பலவீனமடைகின்றன. இதனால்தான் மேற்குலகின் அழுத்தங்கள் எந்தக்காலகட்டத்திலும் வன்மையான அழுத்தங்கள் என்ற நிலைக்கு மாறவில்லை. தென்னாசியாவில் இந்தியா தொடர்பான நலன்கள் அதிகளவில் மேற்குலகிற்கு இருப்பதே இதற்கு காரணம்.

# புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம்

- டி.பி.எஸ்.ஜெயராஜ்

பின் விளைவுகளுக்கு அஞ்சுதல், காவல்துறையினரின்மீது நம்பிக்கை குறைவு, தமிழர் பிரச்சினை பற்றித் தவறான நம்பிக்கை உருவாகிவிடலாம் என்கிற உணர்வு போன்ற பல்வேறு காரணங்களுக்காக புலம் பெயர் தமிழர்கள் காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்வதை அலட்சியப்படுத்தினார்கள். ஆனால் ஒரு தமிழர் அந்தப் பண்ணையில் வைத்து பயங்கரமாகத் தாக்கப்பட்டு அதனால் அவர் தனது உடற் சிகிச்சை மருத்துவரிடம் தனக்கு எப்படி இந்தக் காயங்கள் எற்பட்டன என்ற உண்மையை எடுத்துக்கூறியபோது இந்த ஆபத்தான குமிழ் உடைபட்டு விடயம் அம்பலத்துக்கு வந்தது. உடற் சிகிச்சை மருத்துவர் காவல்துறையினரை எச்சரிக்கை செய்ததும் எஸ்.டி.ஏ.ரி விரைவாகவே இதில் உள்நுழைந்தது.

எஸ்.டி.ஏ.ரி எனப்படும் பயங்கரவாத எதிர்ப்பிற்கான துணை இயக்குனரகம் பிரெஞ்சு உள்நாட்டு அமைச்சின் கீழுள்ள பயங்கரவாத எதிர்ப்பிற்கான விசேட பிரிவாகும். விரைவாகவே எஸ்டிஏரி அதிகாரிகள் பாதிக்கப்பட்டவரையும் மற்றும் அவரைப்போல பாதிக்கப்பட்ட வேறு இருவரையும் ஒருவழியாக இணங்கச்செய்து ஒரு இரகசிய முறைப்பாட்டை 2006 நவம்பரில் பதிவு செய்தனர்.

இந்த அமைப்புமுறை பிரான்ஸ் எல்.ரீ.ரீ.ஈ க்குள்ளே ஒரு முறையான தீவிர விசாரணைக்கு இயக்கம் கொடுத்தது. பரிதி தனது அளவுக்கும் மிஞ்சி வெகுதூரம் போய்விட்டார். சட்ட அமலாக்க அதிகாரிகள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது பிரான்ஸ் எல்.ரீ.ரீ.ஈ பாரிய வீழ்ச்சியை எதிர்கொள்ள நேரிட்டது. பரிதி கூடக் கைது செய்யப்பட்டார்.

# மழை, காலம்



மேகங்கள் கீழிறங்கி தெருக்களில் நடக்கின்றன,
வீடு, ஜன்னல்களை வேகமாக அசைத்து
பறக்க முயற்சிக்கிறது.
தோட்டத்தின் சிறு கைகள்
மேல் நோக்கி எம்புகின்றன.
அவசரத்தில்,
மேகங்கள் இடித்துக்கொண்டு, சிரித்துக்கொள்கின்றன.
மகிழ்ச்சியின் கனம் தாங்காது,
தள்ளாடும் தென்னைகள்,
தேங்காய்கள் உதிர்க்கின்றன.
பெருங்காற்று முற்றத்தை கடந்துவிட்டது.
இன்னும் சில நிமிடங்களில் வந்துவிடும் என,
தரைக்கும் கூரைக்குமாய்
குதித்துக்கொண்டிருக்கிறேன்.

◆◆◆

அடைந்த வீட்டினுள்
நானும் மழையின் சத்தமும்.
மழை பெருக பெருக வீடு மௌனமாகிறது.
சுவர்களெல்லாம் வேர் விரித்து
வளர்ந்துகொண்டேயிருக்கிறது போதி மழை.
சத்தம் மழையென பெய்யும்போது
நானும் வீடென நனைகிறேன்.

◆◆◆

நான் இருக்குமிடம் என் உலகம். மற்றது,
நான் இல்லாத உலகம்.
என் அலுவலக அறைகள் சுவர்களாலானவை.
சுவர்களுக்குள் சூரியன்
விடிவதுமில்லை, மறைவதுமில்லை.
முட்கள் மட்டுமே நகர்ந்துகொண்டிருக்கின்றன.
வெளியே, நனைந்திருக்கும் சாலைகளில்,
மழை என்றும்
பெய்து முடிந்திருக்கிறது.

- ச.அனுக்ரஹா

# நமீதா என்ற பிம்பம்!

இன்னும் இரண்டு சுற்று பெருத்தால் ஷகீலா இன்னும் இரண்டு சுற்று இளைத்தால் நயன்தாரா என்று கஷ்குமுஷ்கு என்றிருக்கும் நமீதா பெண் பிம்பம் நம் காலத்தின் போக பிம்பம் ஆனதெப்படி என்பது வரலாற்று ஆராய்ச்சிக்குரியதாகும். நாயக்கர் கால கோவில் சிற்பங்களிலேயே நாம் பருத்த தனங்களோடு கூடிய இடை விரிந்த கொழுக் மொழுக் பெண் சிலைகளைப் பார்க்கிறோம். அதற்கு முந்தைய சோழர் கால பல்லவர் கால கோவில்களிலுள்ள பெண் சிலைகளிலும் அத்தகைய வளப்பத்திற்குக் குறைவில்லையென்றாலும் அவை கூரிய நாசியையும், மெல்லிய உதடுகளையும், கொடி இடையையும் உடைய ஒல்லிக்குச்சி பெண் சிற்பங்கள். நாயக்கர் கால சிற்பங்களுக்கு அடுத்தபடியாக பருத்த தனங்களும் செழித்த தொடைகளும் கூம்பிய தலையும் உடைய பெண் சுடு மணற் சிற்பங்களை தாய்த் தெய்வ வழிபாட்டிலேயே நாம் பார்க்கிறோம். நிலம், நாடு, குடும்பம், விவசாயம் ஆகியவற்றின் வளமை குறியீடாக வழிபடப்படும் பெண் பிரதிமைகள் அவை. கடுமையான பஞ்சங்கள் பல கண்ட நம் வரலாற்றில் தாட்டியான பெண் பிம்பம் அழகானதாகவும், வசீகரமானதாகவும் செல்வத்தின் குறியீடாகவும் பல தலைமுறைகளாக நிலை பெற்றுவிட்டது.



தமிழ் சினிமாவின் ஆரம்பகட்டங்களிலிருந்து தாட்டியான சதைப்பற்று அதிகமுள்ள பெண் பிம்பங்களே கதாநாயகி பிம்பங்களாக இருந்து வந்திருக்கின்றன. அறுபதுகளிலும் எழுபதுகளிலும் ராணா பிரதாப் சிங் போன்ற சரிந்த தொப்பைக் கதாநாயகர்களுக்கு ஏற்ப சதைப்பற்றுள்ள கதாநாயகி பிம்பங்களே மையத்திரையை ஆக்கிரமித்திருந்தன. எழுபதுகளின் இறுதியில் எண்பதுகளில் இந்த நிலைமை மாறி அடுத்த வீட்டுப் பெண்ணைப் போன்ற தோற்றமுடைய சாதாரண பெண் பிம்பங்கள் கதாநாயகி பிம்பங்களாயின. இந்த சாதாரண பெண் பிம்பங்களுக்கு எதிரிடையான கள்ள இன்பத்தை ஊக்குவிப்பனவாக குண்டு பெண் பிம்பங்கள் தமிழ்த் திரையில் இடம்பெற்றன. தீபா என்ற பெண் பிம்பம் இந்தப் போக்கின் மெல்லிய வடிவ மென்றால் ஜெயபாரதி, ஜெயமாலினி ஆகிய பெண் பிம்பங்கள் கடின வடிவங்களாகும். தென்னிந்திய சினிமாப்படங்களில் இந்த பிம்பங்கள் மழையில் நனைந்தபடியே வாத்து அல்லது ஆடு மேய்க்கும் காட்சிகள் மிகவும் புகழ் பெற்றவை. ரவிக்கை இல்லாமல் வாத்து மேய்த்தது போக குட்டைப்பாவாடை மார்க்கச்சை மட்டும் அணிந்து இந்தப் பெண்பிம்பங்கள் பேய்களாய் ஆடியதைப் பார்த்து தென்னிந்தியாவே கலகலத்துப் போயிற்று.

மேற்சொன்ன பெண் பிம்பங்களின் வம்சாவழியிலேயே நமீதாவின் பிம்பமும் போகப் பொருளாயிருக்கிறது. நமீதா பிம்பத்தோடு நேரடியான இன்பத் துய்ப்பு உறவினை பார்வையாளர்களுக்கு இதுவரை வந்துள்ள திரைப்படங்கள் தரவில்லை, மாறாக கள்ள இன்பத் துய்ப்பினையே அவை ஊக்குவிக்கின்றன.

பங்கேற்போரிடையே நட்பு, பரஸ்பர இசைவு, பரஸ்பர மரியாதை, நேரடித் தன்மை, துய்ப்பினை மறுப்பதற்கான உரிமை, கடப்பாடு ஆகியன இல்லாத இன்பத் துய்ப்பு உறவுகள் அனைத்தும் கள்ளத் துய்ப்புகளே. கள்ளத் துய்ப்புகளின் சித்தரிப்புகளும் காட்சிகளும் அவற்றில் பங்கேற்போரை வெற்று சதைக் கோளங்களாகக் குறுக்குகின்றன.

இது தவிர ஆண் சுத்த கனவான், பெண் மோகினி, பைசாசம், மயக்குபவள், இன்பம் துய்ப்பவள் என்ற தமிழ் சினிமாவின் விசுவாமித்திரர்-மேனகா archetype கதைகளிலும் சம்பவங்களிலும் நமீதா பெண் பிம்பம் மேனகாவாக இருக்கிறது.

கள்ளத்துய்ப்பு சம்பவங்கள் என்பவை எனக்கு எதுவும் தெரியாதே என்ற பாவனையில் இருக்க நனவற்று உடல்களையும் உணர்வுகளையும் பாலின்பம் துய்க்க விடுவனவாகும். மக்கள் நெரிசல் மிகுந்த பஸ்கள், ரயில்கள், கோவில்கள், தெருக்கள், திருவிழாக்கள் என இன்றைக்கு உடல்கள் தெரியாதே என சதை இன்பம் துய்க்கின்றன என்றால் அவைகளுக்கான நிகர் அனுபவமே நமீதா என்ற பெண் பிம்பத்தினை திரையில் பார்ப்பதாகவும் இருக்கிறது.

சதைக்கோளம் என்ற நிலைமை மாறி நமீதா என்ற பெண் பிம்பத்தின் நடிப்பினை திரையில் பார்க்க ஆர்வமாய் இருக்கிறேன்.

- எம்.டி.முத்துக்குமாரசாமி

# இந்தியாவில் முதலீடு செய்ய சிங்கப்பூருக்கு அழைப்பு

(சிங்கப்பூர்)

இந்தியாவில் பெரியளவில் முதலீடு செய்ய சிங்கப்பூருக்கு மன்மோகன் சிங் அழைப்பு விடுத்தார். மேலும் இந்தியாவின் முதலீட்டு விருப்பங்களுக்கு சிங்கப்பூர் ஒரு "மதிப்புமிக்க கூட்டாளி" என்று தெரிவித்தார். சிங்கப்பூருக்கு இரண்டு நாள் சுற்றுப் பயணம் சென்றுள்ள பிரதமர் மன்மோகன் சிங், சிங்கப்பூர் பிரதமர் லீ சீயென் லூங்குடன் நேற்று முன்தினம் பேச்சு நடத்தினார். லூங் அளித்த விருந்து நிகழ்ச்சியில் மன்மோகன் சிங் உரையாற்றும் போது, சிங்கப்பூர் உடனான நமது உறவுக்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கிறோம். நமது நட்புறவு பன்முகத்தன்மை, மதச்சார்பின்மை, மக்களாட்சி, பிராந்திய சர்வதேச விவகாரங்களில் ஒருமித்த கருத்து ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

இந்தியாவின் உட்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்களுக்கு சிங்கப்பூர் மதிப்புமிக்க கூட்டாளியாக வளர்ந்துள்ளது. ஏசியான் பிராந்தியத்திலுள்ள, இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக, முதலீட்டு கூட்டாளியாக சிங்கப்பூர் உள்ளது. சிங்கப்பூரிலிருந்து பெரிய அளவிலான முதலீட்டை வரவேற்கிறோம் என்று மன்மோகன் சிங் தெரிவித்தார்.

இந்தியாவின் இரண்டாவது பெரிய அன்னிய முதலீட்டாளராக சிங்கப்பூர் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கலாசார பரிமாற்றத் திட் டம், நகர்ப்புற மேம்பாட்டுத் துறையில் இந்திய அரச ஊழியர்களுக்கு சிங்கப்பூரில் பயிற்சி ஆகியவற்றுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைசாத்திடப்பட்டன.

இதேவேளை இந்தியாவுக்கு ஐ.நா.சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்க சிங்கப்பூர் ஆதரவு தெரிவித்துள்ளது. இந்தியாவின் வளர்ச்சியால் உலக அரங்கில் அதன் தாக்கம் அதிகரித்துள்ளது.

சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் துடிப்பான செயற்பாடுகளை எதிர்ப்பார்க்கிறோம். ஆசியாவின் வளர்ச்சிக்கும், உறுதித்தன்மைக்கும் இந்தியா



வின் பங்களிப்பு நிறையத் தேவைபபடுகிறது என்று சிங்கப்பூர் பிரதமர் லீ சீயென் லூங் தெரிவித்தார்.




# தீ விபத்தில் 15 திருநங்கையர் பலி

(டில்லி)

டில்லியில் நடந்த திருநங்கையர்கள் மாநாட்டின்போது ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். 31 பேர் படுகாயமடைந்தனர்.

டில்லி நந்த் நகரிப் பகுதியில் உள்ள மண்டபம் ஒன்றில் திருந ங்கையர் மாநாடு ஒன்று நடந்தது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். அவர்களுக்காக மண்டபத்திலேயே உணவு சமைக்கப் பட்டது.

நேற்றுமுன்தினம் மாலையில் மண்டபத்தில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. தீ பரவியதில் உள்ளே இருந்தோர் சிக்கிக் கொண்டனர். இதில் 15 பேர் உயிரிழந்தனர். 31 பேர் பலத்த தீக்காயங்களுடன் மீட்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அரச மருத்துவமனைக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது மண்டபத்தை ஒட்டி தற்காலிக கூடாரம் அமைத்திருந்தனர். அங்கு பல திருநங்கையர் தங்கியிருந்தனர். அங்கு ஏற்பட்ட மின்கசிவில்தான் தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் கூடாரத்திற்கு அருகில் சமையலுக்காக வைக்கப்பட்டிருந்த காஸ் சிலிண்டர்களும் தீயில் சிக்கி வெடித்துச் சிதறியதால் தீவிபத்து பெரிதாகி விட்டது. 12 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் கடுமையாகப் போராடி தீயை அணைத்து நிலைமையை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தன.

# அசாமில் நில நடுக்கம்

(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தின் பல பகுதிகளில் நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டது. நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 5.9 ஆக பதிவாகி இருந்தது. அசாமில் ஏற்பட்ட நிலநடுக்கம், கொல்கத்தா உள ளிட்ட மேற்குவங்கத்தின் பலபகுதிகள், மணிப்பூர், நாகாலாந்து உள்ளிட்ட பகுதிகளிலும் உணரப்பட்டது.

இம்பாலில் இருந்து 133 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மியான்மரில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# கனிமொழியின் பிணை விடயத்தில் சட்டத்தரணிகளில் நம்பிக்கை இல்லை



( டில்லி)

பிணை வழங்க சி.பி.ஐ தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று கூறி விட்டநிலையிலும் கனிமொழிக்கு பிணை கிடைக்காமல் இருப்பதால் அவரது தாயார் ராசாத்தியம்மாள் கனிமொழிக்காக வாதிடும் சட்டத்தரணிகள் மீது கடும் அதிருப்தியில் உள்ளார்.

சாமர்த்தியமில்லாத இந்த சட்டத்தரணிகளை முற்றிலும் மாற்றி விட்டு கட்சிச் சார்பற்ற சட்டத்தரணிகளை நியமிக்குமாறு கருணாநிதியை அவர் வலியுறுத்தி வருவதாக தெரிகிறது.


கனிமொழி சிறைக்குப் போய் 6 மாத காலமாகி விட்டது. 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகார வழக்கில் கைது செய்யப்பட்ட அவர் திஹார் சிறையில் அடைக கப்பட்டுள்ளார்.

சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை அவருக்காக பிணை மனுத்தாக்கல் செய்து அனைத்தும் நிராகரிக்கப்பட்டு விட்டன. தி.மு.க சட்டத்தரணிகள் குழு தான் கனிமொழி வழக்கை கவனித்து வருகிறது. அதில் முக்கியமானவர் சண்முகசுந்தரம். இவர் மீது கருணாநிதிக்கு தனிப் பிரியமுண்டு, எனவே சண்முகசுந்தரத்தை மாற்றுவது என்பது இயலாத காரியம் என்று அவர் ராசாத்தியம்மாளிடம் கூறி விட்டதாகத் தெரிகிறது.

டிசம்பர் 1 ஆம் திகதி கனிமொழி தாக்கல் செய்துள்ள பிணை மனுத்தொடர்பான மேன்முறையீட்டு மனு டில்லி உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

எனவே இதுதொடர்பாக சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்த ஸ்டாலின் டில்லி வந்திருப்பதாகத் தெரிகிறது. அதேசமயம், கிறிஸ்மஸ், புத்தாண்டு பிறப்பு விடுமுறைக்குள் கனிமொழிக்கு பிணை வாங்கி விட வேண்டும் என்ற தீவிரத்திலும் தி.மு.க தரப்பு உள்ளது.

# இந்தியாவிற்கு இது சரிப்பட்டு வராது!



ஊழல் மற்றும் ஜன் லோக்பால் சட்ட மூலத்தை வலியுறுத்தி, டில்லி ராம்லீலா மைதானத்தில் உண்ணாவிரதம் இருந்த சமூக சேவகர் அன்னா ஹசாரே, தன் 12 நாள் உண்ணா விரதத்தை முடித்தபோது, "தேர்தல் சீர் திருத்தங்க ளின் ஒரு பகுதியாக, மக்கள் பிரதி நிதிகளை திரும்பப் பெறும் அல்லது நிராகரிக்கும் உரிமை வழங்கக் கோரி, அடுத்த கட்டமாகப் போராடுவேன்" என, தெரிவித்திருந்தார்.

இது பற்றி கொல்கத்தாவில், மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில், "உலகிலேயே, மிகப் பெரிய ஜனநாயக நாடு இந்தியா. இங்கு, 122 கோடி மக்கள் உள்ளனர். ஒவ்வொரு லோக்சபா எம்.பி.,யையும், சராசரியாக 15 இலட்சம் மக்கள் வாக்குப் போட்டு தேர்ந தெடுக்கின்றனர்.

அப்படிப்பட்ட நிலையில், எம்.பி.,க்களை, எம்.எல.ஏ.,க்களை திரும்பப் பெறும் உரிமை அல்லது அவரகளை நிராகரிக்கும் உரிமை, நம் நாட்டிற்கு சரியாக வரும் என, எனக்குத் தெரியவில்லை. இந்தியா போன்ற பெரிய நாட்டிற்கு இது சரிப்படாது என்றார்.

# ஊழல் பற்றி புத்தகம்

(சென்னை)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் பற்றி 400 பக்க புத்தகம் டில்லியில் வெளியிடப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலரும், டில்லியைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணியுமான விவேக் கார்க், இந்தக் கடிதங்கள் அனைதையும் தொகுத்து புத்தகமாக தயாரித்துள்ளார்.

"2 ஜி வெடிகுண்டு வடக்கு புளாக்கை அசைத்த தகவல் அறியும் உரிமைகள்" என்று அந்த புத்தகத்துக்கு பெயரிட்டுள்ளார். 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரத்தில் எம்.பி.க்கள், முன்னாள், இன்னாள் மந்திரிகள், பிரதமர் மற்றும் செயலாளர்கள் மட்டத்திலான அதிகாரிகள் இடையே நடைபெற்ற கடிதபரிமாற்றங்கள், இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பாக பிரதமருக்கும், பல்வேறு அமைச்சகங்களுக்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து விவரங்களை கேட்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சிலர் மனு செய்திருந்தனர். அவர்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சகங்களில் இருந்து தகவல்கள் தரப்பட்டன. அந்தக் கடிதங்களில் இதுவரை வெளிவராத தகவல்கள் அடங்கி இருப்பதாக கூறப்படுகிறது.

# சபரிமலைக்கு செல்லும் வாகனங்கள் இனி பணம் செலுத்த வேண்டியதில்லை

(திருவனந்தபுரம்)

சபரிமலையில் வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் அறவிடுவதைக் கண்டித்து தொண்டர்கள் கட்டணம் அறவிடும் நிலையத்தை அடித்து நொறுக்கினர். சபரிமலை ஐயப்பன் கோயிலில் தற்போது மண்டலகால பூஜைகள் நடைபெற்று வருகிறது.

இதையொட்டி சபரிமலையில் பகதர்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். பக்தர்கள் வரும் வாகனங்களுக்கு மும்பை அருகே சாலக்கயம் என்ற இடத்தில் நுழைவுக் கடடணம் அறவிடப்பட்டு வருகிறது.

பேருந்து உட்பட பெரிய வாகனங்க ளுக்கு ரூ.100ம், மினி பஸ்களுக்கு ரூ.75ம், வான்களுக்கு ரூ.50ம், கார்களுக்கு ரூ.30ம், ஆட்டோக்களுக்கு ரூ. 15ம் கட்டணம் அறவிடப்பட்டு வருகிறது. ஆனால் சபரிமலை வரும் பக்தர்கள் வாகனங்களுக்கு நுழைவுக் கட்டணம் அறவிடக்கூடாது என்று குறிப்பிட்ட கட்டணம் அறவிடுபவர்களுக்கு கேரள உயர்நீதிமன்றம் கடந்த வருடம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து தரிப்பிடக் கட்டணம் எனக் கூறி மீண்டும் பணம் அறவிடப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கு பாரதிய ஜனதா கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. சாலக்கயத்தில் வாகனங்களுக்கு கட்டணம் அறவிடுவதை நிறுத்தாவிட்டால் நிலையத்தை அடித்து நொறுக்குவோம் என்று யுவமோர்ச்சா அமைப்பினர் எச்சரித்திருந்தனர்.

இந்த நிலையில் யுவமோர்ச்சா மாநிலத்தலைவர் ராஜேஸ் தலைமையில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் சாலக்கயம் நிலையத்தை நோக்கி நேற்றுமுன்தினம் கண்டன பேரணி நடத்தினர்.



அப்போது அங்கு பாதுகாப்பிற்கு நின்ற பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

இதையடுத்து பொலிஸாருக்கும் யுவமோர்ச்சாவினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அப்போது யுவமோர்ச்சா தொண்டர்கள் நிலையத்தை அடித்து நொறுக்கினர்.

அந்தநேரத்தில் சென்ற அனைத்து வாகனங்களையும் அவர்கள் கட்டணம் இன்றி அனுமதித்தனர். பின்னர் போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# ஆங்கிலேயர் காலத்து மின்சார சங்கு

(ஈரோடு)



ஈரோட்டில், 75 ஆண்டுகளுக்கும் மேலாக, சங்கொலி எழுப்பி வரும் ஆங்கிலேயர்கள் கால மின்சாரச் சங்கு, இப்போதும் நல்ல நிலையில் தன் கடமையை நிறைவேற்றி வருகிறது.

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தின் போது, ஆங்கிலேய அதிகாரிகளும், மக்களும் நேரத்தை தெரிந்து கொள்ள, ஊருக்கு பொதுவான இடத்தில் மின்சாரச்சங்கு அமைக்கப்பட்டு, குறிப்பிட்ட நேரத்தில் ஒலி எழுப்பப்பட்டது. ஈரோடு வ.உ.சி. பூங்கா, ஆங்கி லேயர்களால், "பீப்பிள்ஸ் பார்க்" என, அழைக்கப்பட்டது. பூங்காவுக் குள் மின்சாரச் சங்கும் அமைத்தனர்.

அப்போது, காலை, 9 மணி, மாலை, 6 மணிக்கு சங்கு ஒலிக்கப்பட்டது. காலை, 9 மணிக்கு ஒலிக்கப்படும் சங்கொலி, தொழிலாளர்கள் பணிக்கு வர வேண்டிய நேரத்தையும், மாலை, 6 மணிக்கு எழுபபப்படும் சங்கொலி, பணி நிறைவடைந்த நேரத்தையும் காட்டியது.

சங்கொலியை அடிப்படையாகக் கொண்டே, ஈரோடு பொது மக்கள நேரத்தைக் கணக்கிட்டனர். அறிவியல் முன்னேற்றத்தால், கடிகாரம், கம்ப்யூட்டர் என்று வந்த பின்னும், ஈரோடு மக்களின் காலம்காட்டும் கண்ணாடியாக, இன்றளவும் இந்த சங்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது. தற்போது, அதிகாலை 4 மணி, காலை 8, மதியம் 12, இரவு 8 மணிக்கு சங்கொலி எழுப்பப்படுகிறது.

# 150 அரசியல்வாதிகளுக்கு கொலை மிரட்டல் குறுஞ்செய்தி

பாகிஸ்தானின் இரு சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மாகான சட்டசபை உறுப்பினர்கள் 150 பேருக்கு கையடக்க தொலைபேசியிலிருந்து கொலை மிரட்டல் விடுத்து குறுஞ் செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது.

அக்குறுஞ்செய்தியில், பதவியை உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என்றும், இல்லாவிட்டால் கொலை செய்யப்படுவார்கள் என்றும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது பற்றி உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ரெஹ்மான் மாலிக் கூறியதாவது:

குறுஞ் செய்திகள் அனுப்பிய விஷமிகள் யார் என தெரியவில்லை. அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையடக்க தொலைபேசி இலக்கம் கிடைத்தது என ஆச்சரியமாக உள்ளது. மர்ம நபர்கள் பற்றி விசாரிக்க சைபர் கிரைம் பிரிவுக்கு உத்தர விட்டுள்ளேன். இது தொடர்பாக 2 பேரை பொலிசார் பிடித்து விசாரித்து வருகினறனர். மிரட்டலுக்கான காரணம் பொலிசாரின் விசாரணையில்தான் தெரிய வரும் என தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

இதேவேளை பாகிஸ்தானின் தொலை தொடர்புத்துறை, கையடக்க தொலைபேசி நிறுவனங்களுக்கு ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதில் ஆங்கிலம் மற்றும் உருது மொழியில் உள்ள ஆபாச வார்த்தைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், குறுஞ் செய்திகளில் அந்த வார்த்தைகளை நிறுவனங்கள் தடுக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# எகிப்தில் ஆட்சி மாற்றம் கோரி மீண்டும் மக்கள் போராட்டம்

(கெய்ரோ)

எகிப்தில் முபாரக் ஆட்சியை அகற்றப் போராடிய மக்கள் தற்போது இராணுவத்திற்கு எதிராக புரட்சியில் குதித்துள்ளனர். கெய்ரோவில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சுதந்திர சதுக்கத்தில் (தஹிரிர் சதுக்கம்) கூடிய மக்களைக் கலைக்க பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் கொல்லப்பட்டதால் எகிப்தில் மீண்டும் பதட்டமான நிலை ஏற்பட்டுள்ளது.

பல காலமாக எகிப்தை ஆட்சி செய்த ஹோஸ்னி முபாரக் பதவி விலகக் கோரி மக்கள் அங்கு புரட்சியில் ஈடுபட்டனர். சுதந்திர சதுக்கத்தில் குழுமி மக்கள் நடத்திய போராட்டத்துக்கு இராணுவமும் மறைமுக ஆதரவு அளித்தது. இதையடுத்து முபாரக் பதவியை விட்டுஅகன்றார். அதன் பின்னர் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது. முறைப்படி தேர்தல் நடத்துவோம் என்று அது கூறிய நிலையிலும், இன்னும் அது ஆட்சி நிர்வாகத்திலிருந்து அகலாமல் உள்ளது.

இதையடுத்து தற்போது இராணுவம் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என்று கோரி மக்கள் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். சுதந்திர சதுக்கத்தில் திரண்ட அவர்கள் அங்கிருந்தபடி போராட்டத்தை நடத்தி வருகின்றனர். கடந்த 2 நாட்களாக நடந்து வரும் போராட்டம் தற்போது வன்முறைக்களமாக மாறியுள்ளது.



போராட்டம் நடத்த திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களை அங்கிருந்து விலகிச்செல்லுமாறு பொலிஸாரும், இராணுவத்தினரும் உத்தரவிட்டனர். ஆனால் அவர்கள் அகல மறுத்ததால் பொலிஸார் துப்பாக்கிச் சூட்டில் இறங்கினர். இதில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே, தஹிரிர் சதுக்கம் பகுதியில் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒருவரின் உடலை, பொலிஸ்காரர்கள் சிலர் இழுத்துச் சென்று குப்பைத் தொட்டியில் போடும் வீடியோ காட்சி ஒன்று இணையத்தில் டிவிட்டர் மூலம் பரவியுள்ளது. எகிப்து தவிர அலெக்சான்ட்ரியா, சூயஸ் உள்ளிட்ட நகரங்களிலும் கூட போராட்டம் வெடித்துள்ளது. அங்கும் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

# சிரியாவில் துப்பாக்கிச்சூடு; 17பேர் பலி


(டமாஸ்கஸ்)

சிரியாவில் காரில் வந்த மர்ம நபர் சுட்டதில் 17 பேர் உயிரிழந்தனர். அவர்களில் பொலிஸ் உயரதிகாரிகள் நால்வர் அடங்குவர்.

சிரியாவில் ஆளும் பாஷர்-அல்-ஆஸாத அரசுக்கு எதிராக அரபு லீக் கூட்டமைப்பு விடுத்திருந்த போர் நிறுத்த கெடு முடிந்த நிலையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சிரியாவில் ஆளும் அரசுக்கு எதிராக போராட்டக் காரர்கள் பல மாதங்களாக போராட்டம் நடத்திவருகின்றனர். கடந்த மார்ச் மாதத்தில் நடந்த கலவரத்தின்போது 3,500க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் மீது கண்முடித்தனமாக தாக்குதல் நடத்துவதை கைவிடவேண்டும் என அரபு கூட்டமைப்பு கெடு விதித்திருந்தது.

# இயற்கை அனர்த்தங்கள் குறித்து விஞ்ஞானிகள் எச்சரிக்கை




உலகம் இனி அபாயகரமான, எதிர்பாராத வானிலை மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று ஐ.நா.வின் சர்வதேச வானிலை மாற்றக் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆபிரிக்காவில் சந்தித்த விஞ்ஞானிகள், "புவி வெப்பமடைதலின் அபாய விளவுகளை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். தயாரிப்பில்லாமல் இருந்தால் உலகின் சில பகுதிகள் வாழ்வதற்கு பொருத்தமற்றதாக மாறும் அபாயம் உள்ளது என்று இவர்கள் எச்சரித்துள்ளனர்.

உகண்டாவில் உள்ள கம்பாலாவில் நேற்று நோபல பரிசு வென்ற சர்வதேச அரசுகளுக்கு இடையேயான வானிலை மாற்றக் குழு விஞ்ஞானிகள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர். உலகில் வெப்ப நிலை சராசரியாக உயர்ந்து வருவதன் காரணத்தினால் அமெரிக்காவின் டெக்சாஸ் வறட்சி, தாய்லாந்தின் அபாய வெள்ளம், ரஷ்யாவை உலுக்கிய கடும் வெப்ப அலைகள் போன்ற திடீர் வெள்ளப்பெருக்கு, பஞ்சம், வறட்சி, பெரும்புயல் காற்று ஆகியவை ஏற்படும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளது. முன்பெல்லாம் அரிதாக நிகழ்ந்து வந்த வெப்ப அலை வீச்சு இனி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளைத் தாக்கும் என்று இவர்கள் கணித்துள்ளனர்.

மழைச் சூறைக்காற்று என்பது முன்பெல்லாம் 20 ஆண்டுகளுக்கு ஒருமுறையே ஏற்படும் ஆனால் அமெரிக்காவும், கனடாவும் இனிமேல் அதனை அடிக்கடி எதிர்கொள்ள நேரிடும். தெற்கு ஆசியாவில் அபாயகரமான வெள்ளம் இப்போதிருப்பதைவிட 4 முறை அதிகம் நிகழும் வாய்ப்பிருப்பதாக இவர்கள் கணித்துள்ளனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

எந்த அதிகார பேரத்திலும் வலுவான ஒரு தரப்பு மக்களின் இச்சைதான். அவர்களின் விருப்பங்களும் கனவுகளும் அடங்கியது அது. அதை கொஞ்சம் ஒத்திப் போடலாம், கொஞ்சம் திசை திருப்பலாம், கொஞ்சம் ஏமாற்றலாம். ஆனால் அதைத் தாண்டிச் செல்வது முடியாது. வரலாற்றைப் பார்த்தால் அவ்வக காலத்திய சுரண்டல்வாதிகளின் அதிகாரம் மட்டுமே செயல்படுவதாகத் தோன்றும். ஆனால் ஒட்டுமொத்தமாக அது மக்களின இச்சை என்ற பெரும் விசையால் தூக்கிச் செல்லப்படுவதையே காண்கிறோம். ஆற்றிலே மரக்கட்டைகள் போகின்றன போலத் தோன்றினாலும் உண்மையில் ஆறுதான் ஓடுகிறது என்பது போலத்தான்.

அன்டனியோ கிராம்ஸி சொன்னார்: 'அதிகாரம் என்பது அதைக் கையாளும் சிலரிடம் இல்லை. அதற்கு அடியில் தீர்மானிக்கும் வல்லமையாக உள்ளது குடிமைச் சமூகம். அவர்களின் அகத்தில் உறையும் கருத்தியலே அதிகாரமாக ஆகிறது. அந்தக் கருத்தியல் நோக்கியே எல்லா வகையான அறிவுச் செயல்பாடுகளும் செய்யப்படுகின்றன. எல்லாக் கருத்துச் செயல்பாடுகளுக்கும் அந்த அடித்தளத்தைத் தீர்மானிப்பதில் ஒரு பங்கு உண்டு. எதுவுமே வீணல்ல. **– ஜெயமோகன**

விஞ்ஞானம் ஒன்றை எப்படிச் செய்யவேண்டும் என்பதைச் சொல்லும். இலக்கியவாதி ஒன்றை ஏன் செய்யவேண்டும் என்று சொல்வான். அதனால் இலக்கியவாதிகள்தான் விஞ்ஞானிகளுக்கு யோசனை சொல்லவேண்டுமே தவிர, விஞ்ஞானிகள் இலக்கியவாதிகளுக்கு யோசனை சொல்லக்கூடாது.

**– கோ.நம்மாழ்வார்**

சுயவிழிப்புணர்வில்லா விட்டால் தேர்ந்த எழுத்தாளனும், மரபாயிருந்துவரும் சில துவேசங்களுக்கு [இனவெறி, நிறவெறி, சாதிவெறி] அவனறியாமலே பலியாகிப்போகும் அவலம் நேரும். எழுதாமல் விடுபடுபவற்றின் மூலம் கூட, மன இடுக்குகளுக்குள் மறைந்து கிடக்கும் இந்த துவேசம் தன்னை மறைவாகக் காட்டிக் கொண்டிருக்கும்.

எழுத்தாளன் சுயவிழிப்புணர்வு மிக்கவனா? அவனது மனதில் அதிகாரமும் வன்முறையும் எவ்வாறு புதைந்துள்ளது என்பதையும் அவனது வார்த்தைகள் காட்டும்.

**– எஸ்.ராமகிருஷ்ணன்**

மற்றவர்களுடன் வாழ்வது என்ற கலையின் அடிப்படை – அறம்தான். மற்றவர்களை அவர்களின் வித்தியாசங்களுடன் ஏற்றுக்கொள்ளும் கலையை நாட்டார் சமயமோ, மதச் சீர்திருத்த இயக்கங்களோ, இன, மொழி உணர்வுகளோ மட்டுமே தந்துவிட முடியுமா? **– அ. மார்க்ஸ்**

சென்னை ராயப்பேட்டையில் உள்ளது அரசாங்க மருத்துவமனை. இந்த மருத்துவமனையில் ஒரு பிரேத அறை உள்ளது. இந்த நாட்டில் சாலை விபத்துகளும், கொலை போன்ற குற்றங்களும் அதிக எண்ணிக்கையில் இருப்பதாலும், யாருமற்ற அனாதைகள் அதிகம் என்பதாலும் பிரேத அறை எப்போதும் இங்குள்ள டவுன் பஸ் மாதிரியே பிரேதங்களால் நிரம்பி வழியும். 44 பிரேதங்கள்தான் அங்கே இருக்கலாம். ஆனால் எப்போதும் நூற்றுக்கும் மேல் இருக்கும் பிணங்கள்.

அந்தப் பிணவறைக் காப்பாளர் எனக்குத் தெரிந்தவர். நேற்றைய தினம் அங்கே கிடக்கும் பிணங்களின் எண்ணிக்கை 110. இப்படிப்பட்ட பெருமையைக் கொண்ட அந்தப் பிணவறையில் இரண்டு குளிர்ச்சாதன இயந்திரங்கள் உள்ளன. சென்ற மாதம் அதில் ஒன்று பழுதடைந்து விட்டது. பிணங்கள் அழுகி நாற ஆரம்பித்து விட்டன. மருத்துவ மனையில் உள்ள அத்தனை நோயாளிகளும் என்ன பாடு பட்டிருப்பார்கள் என்று சொல்லத் தேவையில்லை. மருத்துவமனையைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும் பிண நாற்றம். பத்து நாட்கள் கடந்து, தினசரிகளில் செய்தி வந்த பிற்பாடு குளிர்சாதன இயந்திரம் பொருத்தப் பட்டது. வேறோர் தேசத்தில் இப்படி நடந்திருந்தால் மக்கள் எல்லோரும் சேர்ந்து பெரிய கலவரமே ஏற்பட்டிருக்கும். ஆனால் இந்தியாவில் மதக் கலவரம்தான் வரும். இப்படிப் பொதுப் பிரச்சினைகளுக்கு மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட மாட்டார்கள்.

**– சாரு நிவேதிதா**

அணுஉலை பாதுகாப்பானது என்றால் அதை ஏன் நாடாளுமன்ற கட்டிடத்துக்கு அருகிலோ அல்லது அணுஉலைக்கு அருகில் நாடாளுமன்றத்தையோ இவர்கள் கட்டிக்கொள்ள கூடாது. இவர்கள் மட்டும் ரொம்ப பாதுகாப்பாக இருப்பார்களாம். மக்கள் எல்லாம் அணுஉலைக்கு பக்கத்தில் இருப்பது பாதுகாப்பானதாம். **– கவிபாரதி**

கீழைத்தேய சமூகங்களில் ஏறக்குறைய எல்லா தந்தையரும் தமது கொடுங்கோன்மையை, சர்வாதிகாரத்தைத் தம் பிள்ளைகள் மீது திணிப்பவர்களாகவே இருந்துவருகின்றனர். இதனை சமூக ஒழுங்கின் விதியாகவே நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். **– பிரேம்**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படுமா?




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெயரளவில் மட்டுமே கூட்டமைப்பாக உள்ளது. ஆனால் கூட்டமைப்பிற்குள் தினமும் நடக்கும் குத்து வெட்டுக்களும் குழிபறிப்புகளும் சந்திக்கு வராத சங்கதிகளாகவே தொடர்ந்தும் உள்ளது. தமிழ் தேசியக்கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக பதிவதன் ஊடாகத்தான் தமது இருப்பை தக்க வைத்துக்கொள்ள முடியும் என EPRLF மற்றும் TELO போன்றன கருதுகின்றன. குறிப்பாக கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிகின்ற விடயத்தில் செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் போன்றோர் ஒற்றைக்காலில் நிற்கின்றனர்.

இவர்களின் இந்த செயற்பாடானது கூட்டமைப்பின் பழுத்த தலைவர்களிற்கு கடுமையான எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தி உள்ள போதிலும் அமைதியாக இவர்களை ஆரத்தழுவி தொடர்ச்சியாக தவணைகளை போட்டு இவர்களை ஏமாற்றி வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் அதிகாரம் மிக்க வலுவான தலைவர்களாக இருக்கின்ற இரா.சம்பந்தனும் மாவை சேனாதிராசாவும் தமிழரசுக்கட்சியைப் பலப்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றனர். தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை கூட்டமைப்பை பெயரளவில் பாவித்துக் கொண்டு தமிழரசுக்கட்சியைப் பலப்படுத்துவதே அவர்களின் முழுமையான நோக்கமாக உள்ளது. இதற்கான பூர்வாங்க வேலைத் திட்டத்தையும் தமிழரசுக்கட்சி ஏற்கனவே நன்கு திட்டமிட்டு கனகச்சிதமாக நகர்த்தி வருகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப் படுத்திய இவர்கள் த.வி.கூட்டணிக்குள் ஏற்பட்ட உடைவை அடுத்து தமிழரசுக் கட்சியை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் போன்றவர்கள் ஊடாக பலப்படுத்துவதற்கான முழுமையான முயற்சியில் இறங்கி உள்ளனர். இந்த முயற்சிக்கு மறைமுகமான ஆசியினையும் ஆசீர்வாதத்தையும் சம்பந்தனும், மாவையும் வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கின்ற ஒவ்வொரு கட்சியும் தத்தமது தனிப்பட்ட பலத்தை வெளிப்படுத்துவதற்கான மாநாடுகளை அண்மையில் நடத்தி இருந்தனர். EPRLF, TELO, தமிழரசுக்கட்சி, ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன மாறிமாறி நடத்திய மாநாடுகளில் குறைந்தளவிலானோரே கலந்து கொண்டதாக குறித்த அரசியல் கட்சியினர் கலைப்படுகின்றனர். அதுவும் குறிப்பாக TELOவும் EPRLFவும் கூட்டிய மாநாடுகளில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே கலந்து கொண்டதாக கூறப்படுகிறது.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் பெருமளவானோர கலந்து கொண்டுள்ளனர். இது தற்போது இக்கட்சியின் செயலாளர் நாயகமாக இருக்கின்ற ஆனந்தசங்கரியை பூரிப்படையச் செய்துள்ளது. மாநாட்டில் கலந்து கொண்ட EPRLF நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் கலந்து கொண்டோரைப் பார்த்து அதிர்ச்சி அடைந்ததுடன், தனது தலைவரான சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் இம்மாநாடு தொடர்பில் தெளிவு படுத்தினாராம்.

த.வி.கூ. தலைவர் ஆனந்தசங்கரியை அணைத்துக் கொண்டு தமிழ் தேசியக கூட்டமைப்பை பதிவு செய்வதற்கான திரைமறைவிலான முயற்சி ஒண்று முன்னெடுக்கப்படுகிறது. இம் முயற்சியில் இறங்கியுள்ள சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான EPRLF அணியினர் எதிர்வரும் ஜனவரி மாத நடுப் பகுதிக்குள் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கான இறுதிக்காலக் கெடுவை இரா. சம்பந்தனுக்கு வழங்கி உள்ளனர்.

இக்காலக் கெடுவிற்குள் கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிவு செய்யத் தவறும் பட்சத்தில் ஆனந்த சங்கரி தலமையிலான அணியினரும் EPRLF, TELO, PLOT ஆகிய அணிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பை அரசியல கட்சியாக பதிவது என கொள்கை அளவில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தலைமைப் பொறுப்பை தனக்குத் தர வேண்டும் என சுரேஸ் பிரேமச்சந்திரன் அடம் பிடிப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனால் TELO, PLOT போன்ற கட்சிகள் ஆனந்தசங்கரியை தலைவராக்குவதே பொருத்தமானது எனவும் அதற்குரிய காரணமாக தற்போதைய உலக ஒழுங்கில் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களைவிட அகிம்சைரீதியாக நகர்வுகளை முன்னெடுப்பவர்களை உலகம் அங்கீகரித்து வருகிறது என்ற வகையில் ஆனந்தசங்கரியை சகல நாடுகளும் குறிப்பாக ராஜதந்திரிகள் நன்கு அறிவார்கள். அதைவிட இந்தியாவை கையாளக்கூடியவர் ஆனந்த சங்கரி என்ற அடிப்படையில் TELO வும PLOவும் உள்ளன.

ஆனந்தசங்கரியோ தனக்கு பதவி வேண்டாம் கூட்டமைப்பிற்குள் வந்தால் மட்டும் காணும் என்ற நிலைப்பாட்டில் உள்ளார். ஆனந்தசங்கரியின் திட்டப்படி கூட்டமைப்பிற்குள் புகுந்துவிட்டால் அதற்குள் பலமான தலைவனாக தானே இருக்கிறேன் என்ற எண்ணத்துடன் இருக்கிறார். எனவே கூட்டமைப்பின் கட்சிப்பதிவுடன் கூட்டமைப்பு சின்னாபின்னம் ஆகுவதற்கான வாய்ப்பு கூடுதலாக உள்ளது.

எந்த விலைகொடுத்தாவது கூட்டமைப்பை அரசியல் கட்சியாக பதிய வேண்டும் என் சுரேஸ் பிரேமச்சந்திரன் உறுதியாகவே இருக்கிறார். இதற்கு பிரதான காரணம் தமிழ் தேசியத்தின் மீதான பற்றுதலோ அல்லது மக்கள் மீதான விருப்பினாலோ அல்ல. மாறாக, தனக்கு உதவுவார்கள் என்று நம்பி களமிறக்கியவர்கள் காலை வாரி வருவதால் பலம் இழந்துவரும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழ் தேசியகூட்டமைப்பு என்ற கட்சிப் பதிவு ஊடாக தன்னை முதன்மைப் படுத்த முயல்கிறார்.

சுரேஸ் பிரேமச்சந்திரனால் நம்பிக்கைக்குரியவர்களாக கருதப்பட்ட சூழலியலாளர் எனக் கூறப்படும் பொ.ஜங்கரநேசன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆகியோரின் போக்குகளால் சுரேஸ் கடுமையாக மனம் உடைந்து போயுள்ளார். பாரளுமண்ற உறுப்பினர் சிறிதரன் தற்போது கூடுதலாக ஒட்டித்திரிவது 'உதயன்' சரவணபவனுடன்தான். சிறிதரனின் நியமனம் தொடர்பில் ஆரம்பத்தில் கடுமையாக எதிர்த்தவர்தான் சரவணபவன். ஆனால் இவருடன் கைகோர்த்தபடி, தமிழரசுக்கட்சியின் ஒரு மூத்த உறுப்பினர் போல் சிறிதரன் தன்னை மிகைபடுத்தி அடையாளப்படுத்தி வருவது சுரேஸை கடுமையாக எரிச்சலடைய வைத்துள்ளது. எப்போதுமே தன்னை ஒரு இறுக்கமான தலைவராக காட்டி வரும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது தெரிவுகளில் விட்ட பிழை தொடர்பில் தற்போதும் மனம் வருந்திவருகிறாராம். 1987ஆம் ஆண்டு காலப் பகுதியாக இருந்தால் இப்படிப்பட்டவர்களை அனுப்பவேண்டிய இடத்திற்கு அனுப்பியிருப்பேன் என தனது நெருங்கிய நண்பர்களிடம் சுரேஸ் கூறிவருகிறாராம்.

உண்மையில் தமிழ் மக்களின் விடுதலைக்கு என புறப்பட்ட இவர்கள் தங்களது பிள்ளைகளை வெளிநாடுகளில் சகல வசதி வாய்ப்புகளுடன் கல்வி கற்க அனுப்பி விட்டு தங்களது சுகபோகங்களுக்காக சண்டையிட்டு வருகின்றனர். அத்துடன் நடைமுறைக்கு ஒத்துவராத குழப்பகரமான அரசியலிலும் கூட்டமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர். தமது கட்சியையே பதிய முடியாத அளவிற்கு கடந்த பல மாதங்களாக அல்லாடி வருகின்றனர். எனவே இவர்களால் தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்கப்போவதும் இல்லை இவர்களது கட்சிப்பதிவு இடம்பெற சம்பந்தரும் மாவையும் இடம்கொடுக்கப்போவதும் இல்லை. கூட்டமைப்புக்குள் தொடர்ந்தும் குத்துவெட்டுக்களும் குழிபறிப்புகளும், பதவிப்போட்டிகளும் இடம் பெறவே போகிறது.

இந்த நிலையில் நடைமுறைச் சாத்தியமான தீர்வினை நோக்கியும் மக்களின் அடிப்படைத் தேவைகள் நோக்கியும் EPDP முற்போக்கான சிந்தனையுடன் நகர்வது ஆரோக்கியமான ஒன்றாகவே தென்படுகின்றது. குறிப்பாக இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்திற்கு விளங்கப்படுத்தி இந்தியாவையும், இலங்கையையும் உடன்பாட்டிற்குள் கொண்டுவந்து வீடமைப்பதற்கான ஐந்து இலட்சத்தி ஐம்பதாயிரம் ரூபாவை மக்களிற்கு நேரடியாக வழங்க இராஜதந்திர ரீதியிலான நகர்வுகளை மேற்கொண்டமை மக்களின் அடிப்படைத்தேவையின் இன்னொரு வெற்றியெனலாம். கூட்டமைப்பு அரசுடன் பல சுற்றுப் பேச்சு நடத்தியும் செய்யாத ஒன்றை அமைச்சர் டக்ளஸ் செய்துள்ளார். இவ்வாறு தமிழரின் அரசியல் உரிமையினையும் நடைமுறைச்சாத்தியமான வழியில் அமைச்சர் வென்றுதருவார் என தமிழ் மக்கள் உணரத் தொடங்கி உள்ளனர். ஆன்ால் என்ன அதிசயங்கள் நடந்தாலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பதியப்படாத கட்சியாகவும் புரியாத புதிராகவுமே இருக்கப்போகின்றது.

- த.கடலவன்

# நூற்றாண்டை எட்டும் பாடசாலை மூடப்படுமா?

யாழ்ப்பாணம் நல்லூர் கோட்டத்தில் அரியாலை ஆசிர்வாதப்பர் வீதியில் அமைந்துள்ள யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம் தனது நூற்றாண்டு விழாவை எட்டி நிற்கும் நிலையில் மாணவர்கள் இன்மை காரணமாக மூடப்படவேண்டிய அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்த பழம்பெரும் வித்தியாலயம் 1918ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. பல கல்விமான்களை உருவாக்கிய இந்தப் பாடசாலையில் தற்போது 15 மாணவர்களே கல்வி கற்கின்றனர். ஒரு அதிபரும், ஒரு ஆசிரியரும் இவர்களுக்கு கல்வியை போதித்து வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வியைத் தொடராது நகர்ப்புறப்பாடசாலைகளை நாடிச் செல்கின்றனர். இதனால் இப்பாடசாலையில் மாணவர்கள் தொகை அதி கீழ் நிலைக்கு சென்றுள்ளது. ஆகையால் அரசின் விதிமுறைகளின் கீழ் இந்தப் பாடசாலையை மூடவேண்டிய தேவை எழுந்துள்ளதாக தெரியவருகின்றது.எனவே நூற்றாண்டை எட்டும் பழம்பெருமைமிக்க பாடசாலை மூடப்படலாம் என்ற தகவல் மிகவும் கவலைக்குரிய ஒன்றே இதனை நிவர்த்தி செய்து அந்தப் பாடசாலையின் நூற்றாண்டுப் பெருமையை நிலை நிறுத்துவதற்கு அப்பகுதியில் வாழும் மக்கள் முன் வரவேண்டும். இதற்கான தீர்வு என்பது உடனடியாக பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துவதே ஆகும்.




2012ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் பாடசாலைகளில் சேர்க்கப்படவுள்ளனர். இனிவரும் ஆண்டிலாவது பெற்றோர் தமது தவறை உணர்ந்து பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையை உயர்த்தி நூற்றாண்டு கால பாடசாலையை மூடும் நிலைக்கு கொண்டு செல்லாது பாதுகாத்து மேலும் பல கல்விமான்களை உருவாக்க உழைக்கவேண்டும்.

த.சுமித்தி

# சிறுரக மோட்டார் சைக்கிள்கள் பதிவு கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாது

## யாழ்.பொலிஸார் திட்டவட்டம்

(யாழ்ப்பாணம்)

சிறுரக மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வதற்கான காலஅவகாசம் மேலும் நீடிக்கப்படமாட்டாது என்று யாழ். பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி குணசேகர திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

49 சி.சி மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்யுமாறு பல தடவை அரசாங்கத்தினால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப் பட்டு கால அவகாசங்களும் வழங்கப்பட்டிருந்தது. அது தவிர பொலிஸாரினாலும் பிறிதொரு கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பகுதி என்பதால் கடந்த இரண்டு வருடங்களாக இத்தகைய நடைமுறையில் தளர்வு கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. தற்போது சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் பொலிஸ் திணைக்களம் உள்ளது. எனவே பொலிஸாரினால் மேற்கொண்டு இத்தகைய மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்படமாட்டாது என்று தெரிவித்த குணசேகர 49 சி.சி மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்ய வேண்டியவர்கள் உடனடியாக யாழ்.கச்சேரியில் பதிவு செய்து அதற்கான ஆவணத்தைப் பெற்றும், தலைக்கவசம் அணிந்தும் பயன்படுத்துமாறு அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டார். நேற்று முன்தினம் முதல் பொலிஸாரினால் அத்தகைய பதிவு செய்யப்படாத மோடடார் சைக்கிள்கள் பிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும், நேற்று மாலை சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட 49 சி.சி. மோட்டார் சைக்கிள்கள் யாழ். பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# பாரத குடும்பம் மீது அச்சுறுத்தல் உடனடி விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

முல்லேரியாவில் சுட்டுக் கொல்லப்பட்ட கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பாரதலக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் குடும்பத்தினருக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்று உத்தரவிட்டார்.

தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக சுட்டுக் கொல்லப்பட்ட கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பாரத லகஷ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி சுமனா பிரேமச்சந்திர பொலிஸில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.இது தொடர்பில் கறுவாக்காடு பொலிஸில் அவர் செய்த முறைப்பாட்டில். தன்னையும் தனது குடும்பத்தினரையும் கொலை செய்யப்போவதாகத் தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தத் தொலைபேசி அழைப்புகளின் இலக்கங்களை அறிந்து கொள்ள முடியாதுள்ளது.

தனது கணவர் கொல்லப்பட்ட தினத்திலிருந்தே தனக்கு இவ்வாறான கொலை, அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புகள் வந்து கொண்டிருப்பதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே கொலை அச்சுறுத்தல் தொடர்பில் உடனடி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# அரச ஊழியர்களுக்கு...

பதவிநிலை அதிகாரிகளுக்கான எஞ்சிய ஐந்து வீத சம்பள அதிகரிப்பு ஜூலை மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

❒ 2004 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு 1000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

❒ 2004 ஆம் ஆண்டிற்கும் 2006 ஆம் ஆண்டுக்கும் இடையில் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் கொடுப்பனவு 500 ரூபாவால் அதிகரிப்பட்டுள்ளது.

❒இந்த கொடுப்பனவுகளின் அரைப்பகுதி ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ளதுடன், எஞ்சிய அரைவாசி ஜூலை மாதம் முதல்வழங்கப்படவுள்ளது.

❒படைவீரர்களின் குடும்பத்தின் மூன்றாவது பிரசவத்திற்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு ஜனவரி மாதம் முதல் பொலிஸாருக்கும் வழங்கப்படவுள்ளது.

❒ பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு, உயிர்நீத்த இராணுவ வீரர்களின் பெற்றோருக்கும் மாதாந்தம் 750 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

❒ 70 வயதைக் கூடந்த சிரேஷ்ட பிரஜைகளுக்காக வழங்கப்படும் 300 ரூபா கொடுப்பனவு, அடுத்த வருடம் முதல் 1000 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

❒ அங்கவீனமுற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா கொடுப்பனவும், ஏனைய காரணங்களினால் சிரமங்களை எதிர்கொள்ளும் நபர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

❒ 210 ரூபாவிற்கும் 615 ரூபாவிற்கும் இடைப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவை 750 ரூபாவாக அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

❒ குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 900 ரூபா சலுகைக் கொடுப்பனவு 1200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

❒ 'திவிநெகும' என்ற கிராமிய அபிவிருத்தி திணைக்களம் அடுத்த வருடம்முதல் ஸ்தாபிக்கப்பட உள்ளமையால் அனைத்து சமுர்த்தி ஊழியர்களுக்கும் அரசாங்க ஊழியர்களாக மாற்றப்படுவார்கள். அத்துடன் அந்த சேவை வட பகுதிக்கும் விஸ்தரிக்கப்படும்.

❒ ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், மற்றும் எழுத்தாளர்களுக்கு உதவுவதற்கான நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

❒ 25 வருடகாலத்திற்கும் அதிகமாக ஊடகத் துறையில் சேவையாற்றிய ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் காரொன்றை கொள்வனவு செய்வதற்கு 12 இலட்சம் ரூபா வட்டியற்ற கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❒ உணவு பாதுகாப்பினையும், உள்நாட்டு உற்பத்தியையும் மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு துறைசார் வரிகளை விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

❒ 750 பேர் புதிதாக விவசாய துறையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு உள்ளடக்கி நான்கு அரிசி ஏற்றுமதி வலயங்களை உருவாக்குவதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

❒ உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதற்காக பால்மா கொள்வனவின் போது விதிக்கப்படும் தீர்வை வரியை அதிகரிப்பதற்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

❒ காட்டு யானைகளின் தொல்லைகளால பாதிக்கப்படும் மக்களின் நலன் கருதி காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

❒ உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான வரி முறைமைகளில் திருத்தங்களை மேற் கொண்டு வருமானங்களை பெற்றுக்கொள்வதற்கான புதிய செயற்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

❒ அடுத்த வருடத்தில் 8 இலட்சம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

❒ கண்டி, நுவரெலியா, திருக்கோணமலை, இரணைமடு, அநுராதபுரம், சீகிரியா ஆகிய பகுதிகளில் உள்நாட்டு விமான நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன் கண்டி, நுவரெலியா மற்றும் இரணைமடு ஆகிய உள்நாட்டு விமான நிலையங்களை அடுத்த வருடத்தில் அமைக்க 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

❒ புதிய வாகனக் கொள்வனவு பதிவு வரி நீக்கப்பட்டுள்ளதாகவும், சொகுசு வாகனங்கள் இறக்குமதிக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், லொறி மற்றும் பஸ்களுக்கான பதிவு வரி அமுலில் இருக்கும் எனவும் அறிவித்தார்.

❒ சுற்றுலா துறைக்கென இறக்குமதி செய்யப்படும் பஸ்களுக்கான வற் வரி நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

❒ 48 மணித்தியாலங்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலா பயணிகளுக்கு விசா கட்டணம் அறவிடப்படமாட்டாதெனவும் கூறினார்.

❒ விளையாட்டு துறையை மேம்படுத்தும் நோக்கில் யாழ். துரையப்பா, கிளிநொச்சி விளையாட்டு மைதானம் உள்ளிட்டவற்றை அடுத்த வருடத்தில் அபிவிருத்தி செய்ய 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

❒பரீட்சையில் சித்தியடையாவிட்டால் வாழ்க்கையிலும் சித்திபெற முடியாது என கருத வேண்டாம். சாதாரண தர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்கள் தொழிற்பயிற்சி கல்லூரிகளில் அடுத்த வருடம் முதல் இணைத்துக் கொள்ளப்படுவர் என ஜனாதிபதி கூறினார்.

❒ நாட்டில் வளர்ந்துவரும் சுகாதார சேவையை மேம்படுத்த 2012 வரவு செலவுத் திட்டத்தில் 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

❒ தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அதற்கென வழங்கப்பட்டு வரும் வருடாந்த கொடுப்பனவை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவிலிருந்து 3 இலட்சம் ரூபா வரையும் புதிய தேயிலை செடிகளை உருவாக்க வழங்கப்படும் வருடாந்த நிதி 1 இலட்சம் ரூபாவிலிருந்து 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவரையும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்தார்.

❒ அடுத்த வருடம் இலங்கையில் சர்வதேச தேயிலை மாநாடு இடம்பெறவுள்ளது. இலங்கை தேயிலைக்கான சந்தையை அதிகரித்துக் கொள்ள இதன்மூலம் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் குறிப்பிட்டார்.

❒ அரச காணிகள் தனியாருக்கு விற்கப்படவில்லை எனவும் அவை 99 வருடங்கள் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

❒ தனியார் நிறுவன பறிமுதல் சட்டத்தின் ஊடாக தனியார் சொத்துக்கள் பறிக்கப்படவில்லை எனவும் அரசிடம் முன்னர் இருந்த நிறுவனங்களே மீளப்பெறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கருணாநிதி வைத்தியசாலையில்

(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.கருணாநிதி உடல்நலக்குறைவு காரணமாக நேற்றைய தினம் சென்னையிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

88 வயதான கருணாநிதி வழக்கமான மருத்துவ சோதனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக தி.மு.க. வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆனால், அவர் சிறுநீர்க் குழாய் தொற்று தொடர்பான சோதனைக்காக வைத்தியசாலைக்கு வந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஆளும் கட்சி...

இதனைத் தொடர்ந்து எதிர்கட்சியினருக்கும் இடையில் வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றதாகவும், இதனைத் தொடர்ந்து ஆளுங் கட்சி உறுப்பினர்கள் தகாத முறையில் செயற்பட்டதாகவும் ஐ.தே.க. எம்.பி. சுஜீவசேன சிங்க தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்றில்...

பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஐ.தே.க. எம்.பி.க்களின் இந் நடவடிக்க்கை அரச தரப்பு அங்கத்தவர்களுக்கு ஆத்திரத்தை தூண்டியது. இதையடுத்து அரச தரப்பு உறுப்பினர்கள் சிலர் ஐ.தே.க. எம்.பி.க்களின் ஆசனங்களுக்கு அருகில் சென்று மேற்படி பதாகைகளை பறிக்க முற்பட்ட போது இரு தரப்பினருக்குமிடையே மோதல் நிலை ஏற்பட்டது.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லொஹான் ரத்வத்த எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க வைத்திருந்த பதாகையை பறித்துக்கொண்டு தனது ஆசனத்திற்குச் சென்றார்.

இவரை அடுத்து ஆளுங்கட்சியின் பொலநறுவை எம்.பி. றொஹான் ரணசிங்க, பதுளை எம்.பி. சாமிக புத்ததாச மற்றும் உதித் லொக்கு பண்டார ஆகியோரும் எதிர்க் கட்சி எம்.பி.க்கள் வைத்திருந்த பதாகைகளைப் பறிக்க முற்பட்டனர். இதன்போது ஆளுங்கட்சியின் திலும் அனுனுகம எம்.பி.யும், ஐ.தே.க. ஹரின் பெர்னாண்டோ எம்.பி.யும் ஒருவரை ஒருவர் தாக்கியுள்ளனர். இதன்போது ஹரின் பெர்னாண்டோ மீது கடுமையான தாக்குதலும் நடத்தப்பட்டது. அத்துடன் ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், ஐ.தே.க. எம்.பி.க்களை இலக்குவைத்து அரச தரப்பு எம்.பி.க்கள் தண்ணீர் போத்தல்களை எறிந்துள்ளனர். பதிலுக்கு ஐ.தே.க. எம்.பி.க்களும் தண்ணீர் போத்தல்களை எறிந்துள்ளனர். இதிலொன்று ஜனாதிபதிக்கு அருகிலும் வீழ்ந்துள்ளது.

தண்ணீர் போத்தல்கள் எறிவுடன், பிரதியமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா, ஐ.தே.க. எம்.பி.க்கள் மீது புத்தகங்களை வீசியெறிந்தார். துறைமுகங்கள் அபிவிருத்தி பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன், ஐ.தே.க. எம்.பி. மங்கள சமரவீரவின் ஆசனத்திற்கு அருகில் சென்று கடும் வார்த்தைகளால் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். எனினும், கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன உட்பட அரச தரப்பு சிரேஷ்ட எம்.பி.க்கள் சிலர் தமது சகாக்களை அமைதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் ஆளுங்கட்சியின் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு, எதிர்க்கட்சியினர் கூச்சலிடுவதை வரவேற்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, எனினும், அந்த எதிர்க்கட்சி பலமிக்கதாக இருக்க வேண்டுமெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மோதல்களுக்கு மத்தியிலும், ஜனாதிபதி தனது வரவு செலவுத் திட்டம் மீதான உரையைத் தொடர்ந்து நடாத்தினார்.

இதேவேளை, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி மோதல்கள் இடம் பெற்றவேளையில் இராஜதந்திரிகள் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண அபிவிருத்திக்கான முக்கிய நிதி மூலங்கள் எவை

## சுவீடன் தூதுக்குழு ஆராய்ந்தது



(யாழ்ப்பாணம்)

யுத்தத்திற்குப் பிந்திய யாழ்ப் பாணத்தின் அபிவிருத்திக்கான நிதிமூலங்கள் எவை என்பதை ஆராய்ந்தறிந்து கொள்வதில் சுவீடன் தூதுக்குழு அதிக ஆர்வம் காட்டியது.

யாழ். குடாநாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் அரசியல் கட்டமைப்பு குறித்தும் யுத்தத் திற்குப் பிந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் நேற்று யாழ்.அரச அதிபரிடம் மிகுந்த ஆர்வத்துடன் விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர்.

இலங்கைக்கான சுவீடன் நாட்டின் உயர்ஸ்தானிகர் லாய்ஸ் ஒலாஷ் லண்ட்கிறின் மற்றும் சுவீடன் உயர்ஸ்தானிகரலாய பிரதிநிதி டாக் ஆகியோர் நேற்றுக் காலை யாழ். குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

நேற்று முற்பகல் யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த குழுவினர் யாழ்.அரச அதிபருடன் குடாநாட்டின் தற்போதைய நிலை தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

யாழ்.அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரனும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பின் போது யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியர்வு, வீடமைப்பு கண்ணிவெடியகற்றல், அபிவிருத்தித் திட்டங்கள், வேலை வாய்ப்பு, நீர்விநியோகம் குறித்து தரவுகளுடன் யாழ்.அரச அதிபரினால் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், எதிர்காலத் திட்டங்களுக்கு 15000 மில்லியன் ரூபா நிதி அவசர தேவையாகவுள்ளதாக அரச அதிபரினால் குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டதுடன், அது தொடர்பாக 2012 ஆம் ஆண்டிற்கான திட்டமிடல் அறிக்கையொன்றையும் அவர் உயர்ஸ்தானிகரிடம் கையளித்தார்.

குறித்த விடயங்களில் அவதானம் செலுத்திய உயர்ஸ்தானிகர் யாழ். குடாநாட்டின் தற்போதைய நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் அரசியல் கட்டமைப்பு குறித்தும் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதிமூலங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் இந்திய வீடமைப்புத் திட்டம், உலக வங்கியின் வீடமைப்புத் திட்டம் என்பன தாமதமடைந்து வருவதன் காரணத்தையும் அறிந்துகொள்வதிலும் ஆர்வமாக இருந்தனர்.

கண்ணிவெடியகற்றல், மீள் குடியர்வு குறிப்பாக வலிகாமத்தில் மீள்குடியர்வு தாமதமடைந்திருப்பதன் காரணத்தையும் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது கண்ணிவெடிகளால் பொதுமக்களுக்கு இழப்புகள், காயங்கள் ஏற்பட்டிருக்கின்றதா என்பது குறித்தும் அரச அதிபரிடம் வினவியதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

# சிறுவன் மீது துஷ்பிரயோகம் சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சிறுவன் மீது துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டு நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட சமையல் பணியாளரை நேற்றைய தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது குறித்த சந்தேகநபரை 2 வார காலம் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் - கண்டி வீதியிலுள்ள உணவகமொன்றில் இருந்த சிறுவனை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்ற வேளை, குறித்த சிறுவன் அங்கிருந்து தப்பிவந்து பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை உடனடியாக கைதுசெய்த பொலிஸார் நேற்றைய தினம் ஆஜர்படுத்தியபோதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். (எஸ்)

# நோய்களை அறிய தகவல் மையம்

(கொழும்பு)

நோய்கள் தொடர்பில் பொது மக்கள் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கான தகவல் நிலையம் ஒன்றை சுகாதார கல்வி பணியகம் நிறுவியுள்ளது.

வார நாட்களில் முற்பகல் 9 மணிமுதல் 3.30 வரையில், இந்த மத்திய நிலையத்தினூடாக மும்மொழிகளிலும் பொதுமக்கள் தமக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே www.suwasariya.go.lk என்ற முகவரிக்கு நோய்கள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பான கேள்விகளை அனுப்பி தகவல்களை பெற்றுள்ளகொள்ளவும் முடியும்.

தொலைபேசியின் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ள 071-0107107 என்ற இலக்கத்தின் ஊடாகவும் விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த நிலையில், குறித்த ஒரு நோய் தொடர்பில், எங்கு சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஆலோசனைகளையும் தகவல்களையும் இந்தத் [illegible]வல் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதார கல்வி பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# பொருளாதார நிலை குறித்து ஆராய சர்வதேச நாணய பிரதிநிதிகள் வருகை

இலங்கையின் பொருளாதார நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி பகுதி பகுதியாக வழங்கப்பட்டு வரும் நிலையிலேயே, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கருத்துத் தெரிவிக்கையில், எமது நாடு தற்போதுள்ள ஸ்திரமான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி பெரும் தேவையாக இருக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எமது பொருளாதார நிலை ஸ்திரமடைந்துள்ளது. சர்வதேச தரவுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் எமது நாட்டின் பொருளாதார ஸ்திரநிலை போதுமானது என்பது தெளிவாகத் தெரியும் என அவர் தெரிவித்தார்.

அப்படியானால், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொகையினை அரசாங்கம் நிராகரிக்குமா? என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட போது, எங்களுக்கு ஏற்புடையதாக இருந்தால் அந்த நிதியினை தாங்கள் ஏற்றுக் கொள்வோம் எனக் கூறியுள்ளார்.

# சர்வதேச குற்றச்சாட்டிற்கு ஆணைக்குழு அறிக்கை பதில்

(கொழும்பு)

சர்வதேச அளவில் முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை வைத்து உரிய பதிலளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரன தெரிவித்துள்ளார்.

முடிந்தளவு விரைவில் நாட்டிற்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதும் முக்கியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கென தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது முக்கியம் என்பதோடு நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை முறையாக நடத்திச் செல்வது அவசியம் எனவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப்படும் போது அரசியல் அதிகாரங்கள் பிரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



மத்திய அரசு எடுக்கும் தீர்மானங்களுக்கு மாகாண[illegible]ரின் பங்களிப்பு அவசியம் என அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார்.

# 9 இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பரப்பில் கைது

(கொழும்பு)

இந்தியக் கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் ஒன்பது பேரை இந்திய கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர் எனத் இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையைச் சேர்ந்த மீனவர்களே நாகப்பட்டினம் பிரதேசத்தில் வைத்து இந்திய கரையோர பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் 9 பேரும் இந்திய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் இரண்டு மீன் பிடிப் படகுகளும், 3500 கிலோ கிராம் நிறையுடைய மீன்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டில், குறித்த பிரதேசத்தில் எட்டாவது தடவையாக இலங்கை மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டதாக இந்திய கரையோரப் பாதுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

இதனிடையே கைது செய்யப்பட்ட மீனவர்கள் 9 பேரும் இன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாய்லாந்திற்கு நிவாரணம்



(கொழும்பு)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இலங்கை 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிப் பொருட்களை நேற்று வழங்கியுள்ளது.

குறித்த உதவி பொருட்களை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் றுங்னாபா ஸ்ரீவனாவித்திடம் கையளித்தார்.

சுமார் 100,000 குடிநீர் போத்தல்களும் 150 தண்ணீர் தாங்கிகளுமுள்ள இந்த உதவி பொருட்கள் பாங்கொக்கிலுள்ள இலங்கை தூதுவராலயத்தின் ஊடாக கையளிக்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக வெளிவிவகார அமைச்சும் இலங்கை தேயிலை சபையும் இணைந்து 1300 கிலோகிராம் தேயிலையை தாய்லாந்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளன.

இது இலங்கை தேயிலை ஏற்றுமதியாளர்களின் நன்கொடை மூலம் திரட்டப்பட்டது. இலங்கை வர்த்தக சம்மளேனம், தேசிய வர்த்தக சம்மேளனம் என்பனவும் மேற்படி உதவி பொருட்களுக்கு பங்களிப்பு செய்துள்ளன.

தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பொருளாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றிற்கு பாரிய இழப்பு ஏற்பட்டது. அத்துடன் சுமார் 600 பேர் உயிரிழந்ததுடன் 5 மில்லியன் மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழினியின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

புலிகள் இயக்கத்தின் மகளிர் அரசியல் பிரிவின் முன்னாள் தலைவி தமிழினியின் விளக்கமறியல் அடுத்த மாதம் ஏழாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை கொழும்பு பிரதம நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்று வழங்கினார்.

தமிழினி தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய் சட்ட நடவடிக்கைகள் குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கப் பெறவில்லை என இரகசிய பொலிஸார் நீதிமன்றில் அறிவித்ததையடுத்தே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதற்கு முன்னர் பல தடவைகள் தமிழினியின் வழக்கு நீதிமன்றத்துக்கு வந்த போதும் சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்காமை காரணமாக அவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழினி மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சிறைச்சாலை அதிகாரிகளால் அவர் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.